Registered as a Newspaper
பக்கங்கள் 16+8
விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 84
ஞாயிற்றுக்கிழமை
18 பெப்ரவரி 2024

முச்சந்தி முரளி



"காணியைச் சனத்திட்ட திருப்பிக் குடுத்தால் ஆமிக்காரருக்கு தோட்டமும் இல்லாமல் உழைப்பும் இல்லாமல் போகப்போகுதே"



வலி. வடக்கு காணி விடுவிப்பு

# ஒரு மாதத்துக்குள் பதிலளிக்குக; இராணுவத்துக்கு ரணில் பணிப்பு!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 18

வலி. வடக்கிலுள்ள விவசாயக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஒரு மாத காலத்துக்குள் சாதகமான நிலைப்பாட்டை வழங்குமாறு இராணுவத்தினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

15

நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்கமுன்னர்

## '13' ஐ முதலில் நீக்குங்கள்!

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, பெப். 18

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்காமல் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை மாற்றுவது பற்றி கருத்தாடல் இடம்பெறுவது நாட்டில் மீண்டும் பிரச்சினைகளுக்கே வழிவகுக்கும். ஜனாதிபதி முறைமை மாற்றம் பற்றிப் பேசுவதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை - இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்

15

## புலிகளின் புதையலா?

நாளை அகழ்வு

முல்லைத்தீவு, பெப். 18

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லையிலுள்ள குமாரசாமிபுரத்தில் விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் இடத்தை நாளை அகழ்வதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

'றெட்பானா சந்திக்கு' அருகில், விடுதலைப்புலிகளின் நிதிப்பிரிவின் தங்கநகைகள் புதைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தப் பகுதியில் பல தடவைகள் சட்டவிரோதமாக தோண்டும் முயற்சிகள் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அது வெற்றியளிக்காத நிலையில் நீதிமன்ற

15

## தமிழ் கட்டாயம்!

பொலிஸாருக்கு கண்டிப்பான உத்தரவு



யாழ்ப்பாணம், பெப். 18

வடக்கில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர்களுக்குத் தமிழ்மொழி தெரிந்திருப்பது கட்டாயம் என யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று திடீர்ப் பயணம் மேற்கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொலிஸாருடன் கலந்துரையாடல் நடத்தினார்.

"வடக்கில் உள்ள சகல பொலிஸ் அலுவலர்களுக்கும் தமிழ்மொழி கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும்.

பொதுமக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறாக உள்ள குற்றச்செயல்களை விரைந்து தடுக்கவேண்டும். போதைப்பொருள் விற்பனையை

15

## அநாமதேயப் பெட்டியால் அந்தரித்த யாழ்.நகர்!

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அருகில் நேற்றுக்காலை கைவிடப்பட்டிருந்த இரும்புப் பெட்டியொன்றில் வெடிகுண்டு இருக்கலாம் என்ற அச்சம் காரணமாக பரபரப்பான சூழல் யாழ்.நகரப்பகுதியில் உருவானது. இதனையடுத்து அங்கிருந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குத் தகவலளித்தனர். உடனடியாகப் பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் அந்த இடத்துக்கு விரைந்து பெட்டியை அங்கிருந்து கொண்டு சென்றனர். எனினும் ஆபத்தான எந்தப்பொருள்களும் அந்தப் பெட்டியில் இருக்கவில்லை என்று அதனைப் பரிசோதித்த பின்னர் அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (அ-ஒ-26)

## மரக்கட்டையில் மோதுண்டு முல்லையில் ஒருவர் சாவு

முல்லைத்தீவு, பெப். 18

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் 'ஆ' பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த விநாயகம் என்று அழைக்கப்படும் சி.சிவபாஸ்கரன் (வயது - 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

புதுக்குடியிருப்பு தெங்கு,பனைகூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினரான இவர் நேற்று மாலை கள்ளை

15

காணாமல் ஆக்கப்பட்டோருக்காக

## நீதி வேண்டிப் போராட்டம்

கிளிநொச்சியில் நாளைமறுதினம்

கிளிநொச்சி, பெப். 18

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டி கிளிநொச்சியில் நாளைமறுதினம் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறு வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி அழைப்பு விடுத்துள்ளார்.

"போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவடைந்து எட்டு ஆண்டுகள் ஆரம்பிக்கின்றன. எங்களுடைய பிள்ளைகளுக்கு இலங்கை அரசாங்கம் நீதி வழங்காது. எனவே சர்வதேசத்திடம் நீதியை வேண்டி நிற்கின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-113)

## கொடூர வன்புணர்வின் பின்னரே சிறுமி கழுத்து நெரித்துக்கொலை

உடற்கூற்றுப் பரிசோதனையில் திடுக்கிடும் தகவல்

மன்னார், பெப். 18

தலைமன்னாரில் சடலமாக மீட்கப்பட்ட 10 வயதுச் சிறுமி மிகக் கொடூரமான முறையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதன் பின்னர் மெல்லிய நூல் அல்லது அது போன்ற ஒருபொருளால் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின் கட்டமைப்புக்கு ஜப்பான் பங்களிப்பு

**கொழும்பு, பெப். 18**
**இலங்கையின் மின்சாரத்துறையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஜப்பான் அரசு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்க உறுதியளித்துள்ளது.**

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகளான கலாநிதி டனகா அகிஹிலோ மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர ஆகியோருக்கு இடையிலான சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. மின்சாரசபையின் மறுசீரமைப்பு அலுவலகத்தை நடத்துவதற்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிபுணர்களை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் வழங்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# பெண் துஷ்பிரயோகம்: பொலிஸ்க்கு கடூழியம்

கொழும்பு, பெப்.18
பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பொலிஸ் அலுவலருக்கு ஏழு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது நுவரெலியா மேல் நீதிமன்றம்.

கந்தப்பளை ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய குறித்த பொலிஸ் அலுவலர், கடமை நேரத்தில் பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் கடந்த 2019 ஆண்டு வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை நீதிபதி விராஜ் வீரசூரிய தலைமையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து ஏழு வருட கடூழியச் சிறை தண்டனை, 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் உட்பட பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 5 இலட்சம் ரூபா அபராதத் தொகையும் செலுத்தவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். (ச-இ)

# நெருக்கடியில் 2 இலட்சம் வணிகங்கள்

கொழும்பு, பெப். 18
கொரோனாத் தொற்றுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியில் 2 இலட்சத்துக்கும் அதிகமான நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் மேற்கொண்ட மதிப்பீட்டில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் நுண், சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# அபுதாபியில் முதல் இந்துக்கோயில்

## திறந்து வைத்தார் மோடி

கொழும்பு, பெப். 18
ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ள பிரதமர் மோடி அந்த நாட்டின் அபுதாபியில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள முதல் இந்துக் கோயிலை கடந்த புதன்கிழமை திறந்து வைத்துள்ளார்.

2015ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகம் சென்றபோது அபுதாபியில் சுவாமி நாராயண் கோயில் கட்ட 27 ஏக்கர் நிலத்தை அந்த நாட்டு அரசு வழங்கியது.

இந்தியாவுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்தும் விதமாக 700 கோடி ரூபாவில் இந்தக் கோயில் கட்டி முடிக்கப்பட்டது. (ச-இ)



# ஜே.வி.பி.யின் வேலைத்திட்டம்: கூட்டமைப்பினருக்கு விளக்கம்!

கொழும்பு, பெப். 18
நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பான ஜே.வி.பி.யினரின் (தேசிய மக்கள் சக்தியின்) வேலைத்திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி.யின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவது தொடர்பில் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளாரா?" என்ற கேள்விக்கு, சரத் பொன்சேகா இன்னமும் ஐக்கிய "மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர். எமது தரப்பில் இணைவது தொடர்பில் அவர் கோரிக்கை எதையும் விடுக்கவில்லை. பரிசீலித்துப் பார்ப்பதற்கும் முதலில் கோரிக்கை விடுக்கப்படவேண்டும் அல்லவா?" - என்று சமரசிங்க பதிலளித்தார். (ம-44)



# மரக்கறி விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.18
கடந்த மூன்று மாதங்களாக சந்தைகளில் உச்சத்தில் காணப்பட்ட மரக்கறி வகைகளின் விலை நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது.

உள்ளூர் உற்பத்திகளின் வருகையும் உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியும் ஏனைய மரக்கறி வகைகளின் விலையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இதனால் மார்ச்சில் அனைத்து மரக்கறி வகைகளின் விலையும் வீழ்ச்சி ஏற்படலாமென வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ப-9)

## காதல் பரிசாக ரோஜா:

# ரூ. 1200 கோடி வருவாய்

கொழும்பு, பெப். 18
இலங்கையில் காதலர் தினத்தில் சுமார் இரண்டு மில்லியன் ரோஜாப் பூக்கள் விற்பனை செய்யப்பட்டன என்று விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ரோஜாப்பூ விற்பனையில் சுமார் 1200 கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு ரோஜாப் பூ விற்பனை உயர்வடைந்துள்ளது.

நாட்டின் மலர் விற்பனை நிலையங்களில் கடந்த 13ஆம் திகதி மாலையிலிருந்து ரோஜாக்கள் விற்பனை சூடுபிடித்ததுடன் அவற்றுக்கு அதிக அளவு கிராக்கியும் காணப்பட்டது.

தனி ஒரு ரோஜாப்பூ 300 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது என்றும், ரோஜாப்பூக்கொத்து 3 ஆயிரம் ரூபா முதல் 6 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 25 இலங்கையரை நாடுகடத்தும் மாலைதீவு

கொழும்பு, பெப். 18
25 இலங்கையர்கள் உட்பட 186 வெளிநாட்டவர்களை மாலைதீவு நாடு கடத்தவுள்ளது. விசா மீறல் மற்றும் போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபட்டோரையே மாலைதீவு நாடு கடத்தவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

25 இலங்கையர்களுக்கு மேலதிகமாக, 83 பங்களாதேஷ் பிரஜைகள், 46 இந்தியப் பிரஜைகள் மற்றும் 8 நேபாளப் பிரஜைகள் இதில் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மணமுறிவுகள் நாட்டில் உயர்வு



கொழும்பு, பெப்.18
இலங்கையில் திருமண முறிவுகள் அதிகரித்துள்ளன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண நீதி மன்றத்தால் குடும்ப உறுப்பினர்களுக்காக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விசேட நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

"2022 ஆம் ஆண்டில் சுமார் 50 ஆயிரம் விவாகரத்து வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் இந்தத் தொகை பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளாகக் கருதப்படுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கள்வர்கள் அற்ற கூட்டணி வேண்டும்

சந்திரிகா கூறுகிறார்

**கொழும்பு, பெப்.18**

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக கள்வர்கள் அற்ற கூட்டணியொன்று அமைத்தால் நல்லது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

பொதுக்கூட்டணி ஒன்று அமைய வாய்ப்புள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றனவா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு, "சட்டபூர்வமாக ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முடியாது" என்றும் அவர் பதிலளித்தார். (ஒ-44)

## ஹரினின் கருத்தால் வலுக்கிறது எதிர்ப்பு

கொழும்பு, பெப்.18

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என்று இந்தியாவில் கூறியது நாட்டின் அரசமைப்புச் சட்டத்தை மீறிய மற்றும் அரச விரோதக் கருத்து என ஆளும்கட்சிக்குள் விமர்சனங்கள் எழுந்துள்ளன என்றும், அவரை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்தியாவில் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக நாட்டுக்குள் பலத்த வாதவிவாதங்கள் ஏற்பட்டுள்ளதால், அமைச்சரவையில் இருந்து அவரை நீக்கி நிலைமையைச் சமாளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

## இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக செயற்படாது ஜே.வி.பி.

கொழும்பு, பெப்.18

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விடயத்தையும் செய்யாது. ஆனால் சீனாவுடனான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகள் பேணப்படும்.

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்டக் குழுவொன்று அண்மையில் இந்தியாவுக்குக்கு அதிகாரபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தது. இந்தப் பயணம் தொடர்பில் விளக்கமளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்கள் வெளியுலக உறவுகளில் முழு வெளிப்படைத்தன்மையைப் பேணுகிறோம் என இந்தியாவிடம் தெரிவித்தோம் என்றும் குறிப்பிட்டார். (எ-இ)

## நிறைவேற்று அதிகாரம் நீக்கம் சந்திரிகாவின் கைங்கரியமே!

கொழும்பு, பெப்.18

ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்காக தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளின் பின்னால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே உள்ளார் என்பது தெரியவந்துள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதைய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாது என்பதால் இந்த முயற்சி வெற்றியளிக்காது. அதற்கமைய நிறைவேற்று அதிகார முறையை நீக்கி அதன் அதிகாரங்களை அமைச்சரவைக்கு வழங்கும் அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்களை கேட்டுள்ளார். (எ-இ)

## பொலிஸ்மா அதிபரால் கடும் முரண்பாடுகள்!

கொழும்பு, பெப்.18

பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றத்துக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான கருத்து முரண்பாடு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

அரசமைப்புச் சபையிலுள்ள ஒன்பது உறுப்பினர்களில் ஐந்து பேர் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்று சபாநாயகர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். அரசமைப்புச்சபையின் பத்து உறுப்பினர்களில் ஒன்பது பேர் மட்டுமே இயங்குநிலையில் உள்ளனர். சிறுபான்மை பிரதிநிதி பதவி இன்னமும் வெற்றிடமாகவே காணப்படுகிறது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சாகர காரியவசம், நிமால் சிறிபால டீ சில்வா ஆகியோர் மட்டுமே சாதகமான நிலைப்பாட்டில் உள்ளனர் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-6)



## ரணில் மாற்றத்துக்குரியவர்

கொழும்பு, பெப்.18

நாடு கோரிய 'முறைமை மாற்றத்தைச்' செய்யக்கூடிய ஒரே தலைவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலில் கட்சி என்ற ரீதியில் நாங்கள் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

## ஜனநாயக போராளிகள் தே.ம.சக்தியுடன் சந்திப்பு

கொழும்பு, பெப்.18

தேசிய மக்கள் சக்தியினருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினருக்குமான சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் நிலஆக்கிரமிப்பு, எல்லை தாண்டிய மீன்பிடி, தமிழர் நில, கடல் வளங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-26)

## விட்டுக்கொடுப்புகள் கட்சிக்குள் அவசியம்

செல்வம் எம்.பி. அறிவுரை

யாழ்ப்பாணம், பெப்.18

கட்சியென்றால் விட்டுக் கொடுப்புகள் இருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான முரண்பாடுகள் நீதிமன்றம்வரை சென்றுள்ளமை தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கூட்டாகச் செயற்பட வேண்டும் என்று இந்தியா வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. நானும் அதையே விரும்புகின்றேன். பாரம்பரியமான ஜனநாயகக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இவ்வாறான சிக்கலில் சிக்கியிருப்பது கவலையளிக்கின்றது. எந்தக் கட்சியாக இருந்தாலும் விட்டுக்கொடுப்புகள் இருக்கவேண்டும்.

கட்சியூடாக மக்களை வழிப்படுத்த வேண்டுமானால் இந்த முரண்பாடுகள் பேசித் தீர்க்கப்பட வேண்டும் -என்றார். (எ-125)


## மரண அறிவித்தல்

**சண்முகதாஸ் தர்மதாஸ்**

(நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை உரிமையாளர்)



தோற்றம் 04.10.1969 — மறைவு 17.02.2024

215/19 இராசாவின் தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகதாஸ் தர்மதாஸ் நேற்று 17.02.2024 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகதாஸ் நித்தியலட்சுமியின் அன்பு மகனும் தாங்கவேலாயுதம் அன்னலட்சுமியின் அன்பு மருமகனும் தங்கராணியின் பாசமிகு கணவரும், திலகவதி, குகதாஸ் காலம் சென்ற முருகதாஸ் மற்றும் தியாகதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரனும் தவராசா, செல்வராசா, சிவராசா, பாஸ்கரன், புஸ்பராணி, விஜயராணி, மஞ்சுளா, ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

215/19 இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்.
077 990 6299

CS (27956) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - கிளி. நீர் வழங்கல் திட்டத்தை முன்மொழியுங்கள்

யாழ்ப்பாணம், பெப். 18

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான பொருத்தமான நீர் வழங்கல் திட்டத்தை முன்மொழியுமாறு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வைத்து வேண்டுகோள் விடுத்தார்.

"வடமாகாணத்தில் 330 கிலோமீற்றர் நீளமான குழாய் பொருத்துதல் மற்றும் 10 ஆயிரம் இணைப்புகளை முன்னெடுக்கவுள்ளோம். இரணைமடு பிரச்சினை தொடர்பாக ஆளுநரும் என்னுடன் பேசினார்" என்றார் ஜீவன் தொண்டமான்.

'கிளிநொச்சி குளத்தில் மருத்துவமனைக் கழிவுகள் கலப்பதாக' ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த மருத்துவர் த.சத்தியமூர்த்தி, சிறு பிரச்சினை உள்ளது, என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர், வையாறு குளத்தின் மூலம் பெறப்படும் நீர் என்பது 10 அடிக்கு குளத்தில் சேமிக்கப்பட்ட பின்னரே சுத்திகரிப்பு மூலம் விநியோகிக்கப்படுகிறது. குடிதண்ணீரின் தரம் குறித்த பிரச்சினையை ஒரு இரவில் மாற்றியமைக்க முடியாது, என்றும் குறிப்பிட்டார்.

**யாழ்ப்பாணத்துக்கு அரிசி**

இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கிளிநொச்சி மருத்துவமனை கழிவுகள் சீராக நிர்வாகத்தால் அகற்றப்படுகின்றன. தேவையின்றி மக்களை அச்சமூட்டாதீர்கள். மேலும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 2009 இற்கு முன்னர் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி கந்தளாய் மற்றும் பராக்கிரம சமுத்திரத்துக்கு அது மாற்றப்பட்டது. மேலும் இது ஒரு குடியேற்ற மாவட்டம். சிறீதரன், யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் தரமாட்டார் என பலர் சொல்கிறார்கள். எனது ஊர் நெடுந்தீவு. இங்கும் தண்ணீர் தேவை. இரணைமடுவில் தண்ணீர் குறித்த அளவுக்குக் குறைந்தால் எடுக்கமுடியாது என்றே கூறுகின்றனர். மேலும் 41 ஆயிரம் ஏக்கரில் 21 ஆயிரம் ஏக்கர் மாத்திரமே தற்போது பயன்படுத்தப்படுகின்றது. முரசு மோட்டை உட்பட்ட பல பிரதேசங்களின் விவசாயிகள் வாய்க்கால் தொடர்பான பிரச்சினையில் உள்ளார்கள். ஆகவே பல்வேறு பிரச்சினைகளைக் கொண்ட எமது மாவட்டத்துக்கு நேரடியாக வருகை தந்து விவசாயிகளுடன் நேரடியாகப் பேசி தீர்க்கமான முடிவு எடுக்கலாம். கிளிநொச்சிக்கு தண்ணீர் இன்றி போகுமானால் யாழ்ப்பாணத்துக்கான அரிசி கேள்விக் குறியாக மாறும். பூநகரி மக்களும் நீர் வழங்கல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் - என்றார்.

இதேவேளை - கருத்துத் தெரிவித்த வடக்குமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே சிவஞானம், இரணைமடு தண்ணீர் அவ்வாறே இருக்கட்டும். நீங்கள் எமக்கான திட்டமாக என்னால் முன்மொழியப்பட்ட பாலியாற்றுத் திட்டத்தை நடைமுறைபடுத்தினால் போதுமானது. இது தொடர்பில் அனைவரும் உடன்படுவர். இதனை முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

**பாலியாற்றுத் திட்டத்துக்கு 266 மில். டொலர்**

இறுதியில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், 250 மில்லியன் ரூபா பாலியாற்று திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை விட 266 மில்லியன் அமெரிக்க டொலர் குறித்த திட்டத்துக்கு முழுமையாகத் தேவைப்படுகிறது. தற்பொழுது கடன் மறுசீரமைப்பு, பொருளாதார நெருக்கடி சவாலாக உள்ள நிலையில் வேறு நிறுவனங்களுடனும் பேசி இதனை முன்னெடுக்கத் தீர்மானிப்போம். மொனராகலை, மாத்தறை மாவட்டங்களிலும் இவ்வாறான நீர் வழங்கல் பிரச்சினை ஏற்பட்டது. ஆனால் அங்கிருந்த மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட தீர்வு முறைமையின் மூலம் தற்சமயம் பிரச்சினை இயன்றளவு குறைந்துள்ளது.

ஆகவே யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பில் எமக்கு முன்மொழிவைச் சமர்ப்பியுங்கள். மற்றைய அரசியல்வாதிகள் போலன்றி நான் அமைச்சராக உள்ள காலத்தில் இரணைமடு, பாலியாறு உட்பட நீர்வழங்கல் பிரச்சினை குறித்து வடமாகாணத்தில் தீர்க்கலாம் என நினைக்கிறேன் - என்றார்.

(ஒ-125)

# விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

*யாழ்ப்பாணம், பெப். 18*

ஆனைப்பந்தியில் சில மாதங்களுக்கு முன் இடம்பெற்ற அம்புலன்ஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த வர்த்தக நிலைய உரிமையாளர் நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் கிழக்கு, தாமாந்தோட்டத்தைச் சேர்ந்த சண்முகதாஸ் தர்மதாஸ் (வயது -54) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளரும் அவரது உதவியாளரும் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரே வந்த அம்புலன்ஸ் மோதியதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில் வர்த்தக உரிமையாளர் நேற்று உயிரிழந்துள்ளார்.

(ஒ-66)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
மாபிள் பதித்துத்தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்

**077 334 1281**

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V) 1990ல் பிறந்து தற்பொழுது கொழும்பில் 15 வருடம் சொந்த வியாபாரம் (IT Business) செய்யும் மகனுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர்.

**077 351 7932**

(CS271993)-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 09 . 1953



மறைவு 16 . 02 . 2024

**அருணாசலம் செல்வராசா**
(முன்னாள் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் செல்வராசா நேற்று முன்தினம் (16.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அல்பொன்ஸ்-இராசம்மா தம்பதியரின் மருமகனும், டாக்டர். யோகம்மாவின் அன்புக் கணவரும், மேனகா அவர்களின் அன்புத் தந்தையும், நதீர தரங்க விஸ்வஜித் அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற புஷ்பராணி மற்றும் குண ராசா, துரைராசா காலஞ்சென்ற புஷ்பஞானம் மற்றும் புஷ்பலதா, பிறேமாவதி, பிறேமதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அதீசநெகாரா, அச்ஜயா அவர்களின் அன்புப் பேரனும், விஜயன் (முன்னாள் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்க முகாமையாளர்), காலஞ்சென்ற ராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2024) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மட்டுவில் கிழக்கு.** **குடும்பத்தினர்**

(CS 27932) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 12 . 1933



மறைவு 17 . 02 . 2024

**இராமையா பரஞ்சோதி**

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், தலவாக்கலை மற்றும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமையா பரஞ்சோதி அவர்கள் நேற்று (17.02.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமையா அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற சிவபாக்கிய லக்சுமி (சங்கரத்தை) அவர்களின் அன்புக் கணவரும், கஜனி (ஆசிரியை, யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) அவர்களின் தந்தையும், கமலா அவர்களின் அன்புச் சகோதரரும், தர்மலிங்கத்தின் மைத்துனரும், இராஜமோகனின் மாமனாரும், மயூரிக்காவின் பேரனும், சுதாகரன், சதாச்செல்வி, சத்யசெல்வி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கமலபதி,
மாதர்சங்க வீதி,
சித்தன்கேணி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 41838) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பணிநயப்பு விழா



கிளிநொச்சி, பெப்.18

கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரனுக்கான பணிநயப்பு விழா கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் மாவட்டச் செயலர் மற்றும் அவரின் துணைவர், தாயார், மகள், கரைச்சி உதவி மாவட்டச்செயலர், வடகிழக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர், முகாமைத்துவ பயிற்சி நிலையப் பயிற்சி உத்தியோகத்தர், மட்டக்களப்பு கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர், மட்டக்களப்பு உதவி மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு மேலதிக மாவட்டச் செயலர், மட்டக்களப்பு பதில் மாவட்டச் செயலர், கிளிநொச்சி மாவட்டச் செயலர், கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காளர், உதவி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளர், கிளைத் தலைவர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-113)

# கொடுப்பனவு மீளாய்வு

சாவகச்சேரி, பெப்.18

தென்மராட்சிப் பிரதேசசெயலக சமூக சேவைகள் அலகால் பொருண்மியம் நலிவுற்றோருக்கு வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோய்க்கொடுப்பனவு, அங்கவீன முற்றோருக்கான கொடுப்பனவு மற்றும் முதியோருக்கான கொடுப்பனவு ஆகியவற்றுக்கான மீளாய்வுகள் அந்தந்தக் கிராம அலுவலகங்களிலுள்ள கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பற்றாக்குறையுடன் இயங்கும் இ.போ.ச. யாழ்ப்பாணச்சாலை

**யாழ்ப்பாணம், பெப்.18**

**இலங்கைப் போக்குவரத்துச்சபையின் யாழ்ப்பாணம் சாலை பஸ்களுக்கு சாரதிகள், நடத்துநர்கள் தேவையாக உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சேவைகளை மேற்கொள்வதில் சாரதிகள், நடத்துநர்கள், பஸ்கள் பற்றாக் குறையே பிரச்சினையாக உள்ளது. மகரகமவில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தவிடயம் சுட்டிக்காட்டப்பட்ட போது, கொழும்பில் பயிற்றுவிக்கப்பட்ட சாரதிகள் நியமிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த மாவட்டத்தைச் சேர்ந்த 8 சாரதிகள் தற்போது வெளிமாவட்டத்தில் உள்ளனர். அந்தந்த மாவட்டத்திலுள்ளவர்களை வெற்றிடங்களுக்கு நியமிக்கும்போது இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## வடதாரகைப் படகின் திருத்தங்கள் நிறைவு

யாழ்ப்பாணம், பெப்.18

வடதாரகை படகின் திருத்தப்பணிகள் நிறைவடைந்துள்ளன என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கடற்படையினர் தெரிவித்தனர்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த மாதம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கச்சதீவு திருவிழா நடைபெறவுள்ள நிலையில், வடதாரகை படகு திருத்தப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை கடற்படையிடம் அந்தப் படகை திருத்தப் பணிகளுக்காக வழங்கியிருந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த கடற்படை அதிகாரிகள், திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்றும், ஆசனங்கள் யாவும் நெடுந்தீவில் காணப்படுகின்றமையால், படகைக்கொண்டு சென்று ஆசனங்களைப் பொருத்தும் பணிகள் ஓரிரு நாள்களில் நிறைவடையும் என்று தெரிவித்தனர். (எ-125)

## கேட்டதோ 90 லட்சம் கிடைத்ததோ 10 லட்சம்

யாழ்ப்பாணம், பெப்.18

கச்சதீவுத் திருவிழாவுக்கு 90 இலட்சம் ரூபா மதிப்பீட்டுச் செலவினமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போதுவரை திணைக்கள ரீதியாக 10 இலட்சம் ரூபா கிடைத்துள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு குடிதண்ணீர், மலசலகூடம் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இந்த ஆண்டு பயணிகளிடம் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. யாத்திரிகர்களே தங்களுக்கான உணவையும் கொண்டு செல்லவேண்டும். இந்தியத் துணைத் தூதுவராலயம் கடந்த ஆண்டு நிதிப் பங்களிப்பை வழங்கியிருந்தநிலையில், இந்த ஆண்டு அது தொடர்பான எந்தத் தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை - என்றார். (எ-125)

## யாழ். மாவட்டத்துக்காக ஒதுக்கிய நிதி சொற்பமே

### அமைச்சர் டக்ளஸ் கைவிரிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சொற்ப நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதிமூலம் சிறுசிறு விடயங்களையே மேற்கொள்ளமுடியும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்துக்காக 322 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தநிதிமூலம் பெரியளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-66)

## வடதாரகை பயணத்துக்கு எரிபொருள் பற்றாக்குறை

கொழும்பு, பெப்.18

கச்சதீவு திருவிழாவில் சேவையில் ஈடுபடவுள்ள வடதாரகைக்கு ஒரு வழித்தடத்துக்கு 400 லீற்றர் எரிபொருளைச் செலவு செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. எமக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலாக இந்தச் செலவினம் உள்ளது என்று வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கச்சதீவுக்குச் சென்று மீள் திரும்புவதற்கு 800 லீற்றர் எரிபொருள் செலவாகின்றது. எமக்கான எரிபொருளைப் பெற்றுத்தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கச்சதீவு திருவிழாவுக்கு முன்னர் நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே சேவையை நடத்துவதன்மூலம், படகில் ஏற்படக்கூடிய பழுதுகளை முற்கூட்டியே திருத்திக்கொள்ளமுடியும் என்று தெரிவித்தார்.

"எரிபொருள் விடயத்தைப் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கும், கடற்படைக்கும் அறியப்படுத்தி அதற்கான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்" என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (எ-125)

## நெடுந்தாரகை படகு திருத்துவது தாமதம்

யாழ்ப்பாணம், பெப்.18

திருத்தப்பணிகளுக்காக நெடுந்தாரகை படகு திருகோணமலை கடற்படைத்தளத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளபோதும், படகின் திருத்தப் பணிகள் தாமதமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. திருத்தப் பணிகள் தொடர்பாக கடற்படைக்கும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையே மேற்கொள்ளப்படவேண்டிய ஒப்பந்தங்கள் தாமதமாவதாலேயே திருத்தப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். (எ-125)

## மீனவர் சிக்கலுக்குத் தீர்வுகாண இந்திய அரசிடம் கோரிக்கை!

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.18**

**இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வு காண இந்திய அரசிடமும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 43 தமிழக மீனவர்களைச் சந்தித்த அமைச்சர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.**

**சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்புகின்றேன். வடக்கில் உள்ள மீனவர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள், சிறிய படகுகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது. மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமும், இலங்கை ஜனாதிபதியிடமும் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார். (எ-20)**

## வங்கிக் கணக்குகளில் கொடுப்பனவு

யாழ்., பெப்.18

தென்மராட்சிப் பிரதேச 'அஸ்வெசும' நலன்புரித்திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளுக்குரிய பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வங்கிகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (பு-9)

## பலாலி ஓடுதள அகலிப்புக்கு காணிகள் சுவீகரிக்கப்படாது

### விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகிறார்



பலாலி ஓடுதள விஸ்தரிப்புக்காக காணிகள் சுவீகரிக்கப்படாது என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா உறுதியளித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியா - இலங்கையிடையில் பாலம் அமைப்பது தொடர்பாக இந்தியத் தூதுவர் மன்னார் சென்று ஆய்வு நடத்தியுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான இணைப்பு நிச்சயம் ஏற்படுத்தப்படும். பலாலி ஓடுதள விஸ்தரிப்புக்காக 500 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன என்று வெளியான தகவல் தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்டது. அவ்வாறான எண்ணம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார் - என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நவீன சர்வாதிகாரத்தின் முன்னுதாரணம்

உள்நாட்டு, வெளிநாட்டு எதிர்ப்புகள் அனைத்தையும் தூக்கி வீசி விட்டு நிகழ்நிலைக் காப்புச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இம்மாதம் முதலாம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டும் விட்டது. பிரித்தானியரிடமிருந்து விடுதலையடைந்த காலம் தொட்டு ஜனநாயகம் என்ற பெயரில் எமது நாட்டில் இடம்பெற்று வரும் கேலிக்கூத்துக்கு இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையும் நல்லதொரு எடுத்துக்காட்டு. நிகழ்நிலைக் காப்புச்சட்டம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. இந்தச் சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்திலும் ஐம்பது மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. ஐ.நா. சபை, சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் இந்தச் சட்டத்தினால் ஏற்படவுள்ள தாக்கம் பற்றி அரசாங்கத்துக்கு இடித்துரைத்திருந்தன. எனினும் இவை எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்குகளே. பெரும்பான்மை நாடாளுமன்ற சர்வாதிகாரத்தால், 'ஜனநாயகம்' என்ற பெயருடன் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு பெரும்பான்மை நாடாளுமன்ற சர்வாதிகாரத்தினூடாக, ஜனநாயகம் என்ற பெயருடன் சட்டங்கள் நிறைவேற்றப்படுவது இது முதல் தடவையல்ல.

சுதந்திர இலங்கையின் தேசபிதா என அழைக்கப்படும் டி.எஸ்.சேனநாயக்கா சுதந்திரமடைந்த அடுத்த வருடமே இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டத்தைக் கொண்டு வந்து மலையக மக்களை நாடற்றவர்களாக்கினார். பின்னர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா தனிச்சிங்களச் சட்டத்தைக்கொண்டு வந்து இலங்கையில் இரத்த ஆறு ஓட வழி வகுத்தார். இலங்கையைக் குடியரசாகப் பிரகடனம் செய்து சிறுபான்மை இனங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 49 ஆவது பிரிவையே இல்லாமல் செய்தார் பண்டாரநாயக்கவின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா. இதனூடாக கணவர் விட்டுச்சென்ற சிறுபான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை சிறிமாவோ சிறப்பாகச் செய்திருந்தார். ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆர். ஜெயவர்த்தன, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அறிமுகம் செய்ததுடன் தமிழர்களை அழிக்கும் நோக்குடன் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தையும் அனைவரின் எதிர்ப்பையும் மீறி நிறைவேற்றினார். இப்போது நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தை மனித உரிமை அமைப்புகளும் சர்வதேசமும் கண்டிப்பது போன்று அன்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை மனித உரிமை அமைப்புகளும் சர்வதேசமும் கண்டித்திருந்தன. ஆனால் யாருடைய கண்டனத்தையும் ஜே.ஆர். ஜெயவர்த்தன பொருட்படுத்தவேயில்லை. இன்று ஜே.ஆரின் மருமகனான ரணில் விக்கிரமசிங்க, மாமனார் கொண்டு வந்த சட்டத்தின் மூலம் அரசுக்கு எதிரானவர்களை வேட்டையாடுகிறார்.

ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சியிலும் தமது எண்ணங்களை நிறைவேற்றும் நோக்குடன் பல்வேறு திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடந்த எழுபத்தைந்து வருட காலப்பகுதியில் இருபத்தொரு திருத்தங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவற்றில் இந்திய - பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டம், தனிச்சிங்களச்சட்டம், இலங்கைக் குடியரசின் அரசமைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றன சிறுபான்மையினரை ஒடுக்கும் நோக்குடன் கொண்டுவரப்பட்டவை. ஏனைய சட்டங்கள் அல்லது திருத்தங்கள் யாவும் அந்தக் காலப்பகுதியில் ஆட்சிப்பீடமேறியவர்களின் சுயநலனுக்காக நிறைவேற்றப்பட்டவை. மக்களால் மக்களுக்காக, மக்களாட்சி என்பதே ஜனநாயகத்தின் கருப்பொருள். தனது குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கியபோது தமது நாட்டில் இருந்த ஆட்சி முறையை தனது குடியேற்ற நாடுகளிலும் அறிமுகம் செய்துவிட்டுச்சென்றது பிரிட்டன்.

இன்று பிரிட்டன் அறிமுகம் செய்த ஜனநாயகம் நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து தம்மை ஆள்வதற்காக ஒரு சர்வாதிகாரியைத் தேர்ந்தெடுப்பது என்ற நிலைமைக்கு மாறிவிட்டது. ஜனநாயகம் என்ற பெயரில் நவீன சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் உலகநாடுகளுக்கே முன்னுதாரணமாக மாறிவிட்டது ஸ்ரீலங்கா.



# கடன்சீரமைப்பின் அவசியத்தை மீள வலியுறுத்துகிறது ஜப்பான்!



கொழும்பு, பெப்.18

**பொருளாதார மீட்சிக்கான இலங்கையின் பாதையில்கடன்மறுசீரமைப்பின்முக்கியத்துவத்தை இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடெக்கி வலியுறுத்தியுள்ளார்.**

பொருளாதார நெருக்கடியின் பன்முகத்தன்மையில் நாடு எதிர்கொள்ளும் சவால்களின் சிக்கலான தன்மையைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியானது அதன் கடன் நிலைத்தன்மை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு விரிவான அணுகுமுறையை அவசியமாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத சீனா மற்றும் இந்தியா போன்ற பெரியளவிலான கடன் வழங்குநர்களுடன், கடன் மறுசீரமைப்புக்கான பாரம்பரிய வழிகள் போதுமானதாக இருக்கவில்லை. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடன் இணைந்து, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை ஆரம்பிக்க ஜப்பான் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்தது. ஜப்பானின் இந்த ஈடுபாடு காரணமாக கடந்த நவம்பர் மாதம் உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டது. (எ-இ)

## தே.எண்ணெயில் தன்னிறைவில்லை

கொழும்பு, பெப்.18

நாட்டில் வருடாந்த தேங்காய் எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்தி போதுமானதாக இல்லை என்று நடுத்தர மற்றும் சிறிய அளவிலான தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் வருடாந்த தேங்காய் எண்ணெய் தேவை 2 இலட்சத்து 40 ஆயிரம் மெற்றிக் தொன் தற்போது, நாட்டின் வருடாந்த தேங்காய் உற்பத்தி 2 ஆயிரத்து 800 தொடக்கம் - 3 ஆயிரத்து 200 மில்லியனாகக் காணப்படுவதுடன் 70வீதம் உள்நாட்டு நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கிட்டு பற்றாக்குறையை மட்டும் இறக்குமதி செய்து சமநிலையைப் பேணாவிட்டால் உள்நாட்டு தேங்காய் எண்ணெய் தொழில் வீழ்ச்சியடையும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

## இஸ்ரேல் - இலங்கை நேரடி விமான சேவை

கொழும்பு, பெப்.18

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இதனூடாக இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதில் ஏற்படும் தாமதங்களைத் தடுக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இ.போ.ச.பஸ்கள் ஏலத்தில்

சேவையில் ஈடுபடுத்த முடியாத 700 பஸ்களை இந்த வருடம் ஏலத்தில் விட இலங்கைப் போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது. பஸ்கள் இரும்புக்காக ஏலம் விடப்பட்டு அதில் கிடைக்கும் பணத்தில் புதிய பஸ்களைக் கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ச-இ)

## கொழும்பில் ஈரான் கப்பல்

கொழும்பு, பெப்.18

ஈரானியக் கடற்படைக் கப்பலான இரினிஷ் நேற்றுமுன்தினம் காலை கொழும்பை வந்தடைந்துள்ளது. இரினிஷ் கப்பல் 107 மீற்றர் நீளமும் 94.4 மீற்றர் நடைபாதையும்கொண்டது. இந்தக் கப்பலில் 250 கடற்படையினர் பணிபுரிகின்றனர். இந்தக் கப்பல் நாளை திங்கட்கிழமை வரை தரித்திருக்கும். கப்பல் தரித்து நிற்கும் காலப்பகுதியில் ஈரானியக் கடற்படையினர் பல்வேறு சுற்றுலாமையங்களுக்குச் செல்லவுள்ளனர். ஈரானியக் கடற்படையினர் இலங்கைக் கடற்படைக் கப்பல்களையும் இலங்கைக் கடற்படையினர் ஈரான் கடற்படைக்கப்பலையும் பார்வையிடவுள்ளனர். (எ-6)

## நாளை

19.02.2024

திங்கட்கிழமை

மாசி–07

சுபநேரம் : 12.32 – 02.02

ராகுகாலம் : 08.02 – 09.32

## நாளொரு நல்வார்த்தை

நட்சத்திரத்தை இரசிக்க
வேண்டும் என்றால்
இருளில் இருந்து தான்
ஆகவேண்டும்.

– ஓஷோ–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்காத தபாலகத்தால் தேவிபுரம் மக்கள் அல்லல்

**முல்லைத்தீவு, பெப்.18**

**முல்லைத்தீவு, தேவிபுரம் கிராமத்தில் தபாலகம் இயங்காததால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

தேவிபுரம் கிராம மக்கள் தமது தபாலகப் பணிகளை 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புதுக்குடியிருப்பு நகரத்துக்குச் சென்றே நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இது தொடர்பாக பிரதேசசெயலக மட்டத்திலும் கிராம மட்டத்திலும் நடைபெறுகின்ற கூட்டங்களில் பல தடவைகள் தேவிபுரத்தில் தபாலகத்தை இயங்க வைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்தபோதும் இது வரை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்தநிலையில் தபாலக சேவையுடன் தொடர்புடைய உயரதிகாரிகள் தேவிபுரத்தில் தபாலக சேவையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

இந்தியத் தொலைக்காட்சி நடத்திய பாடல் போட்டியில்வெற்றிபெற்ற கில்மிஷாவைக் கௌரவிக்கும் நிகழ்வு வடமராட்சியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய ஏற்பாட்டில் வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய மைதானத்திலுள்ள வேலுப்பிள்ளை கனகம்மா அரங்கத்தில் குறித்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ப-100)



## தரம் - 5 மாணவருக்கு பயிற்சிப் புத்தகங்கள்

கைதடி, நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் -5 இல் கற்கும் 16 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழிகாட்டல் பயிற்சிப் புத்தகங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ப-9)



### 30க்கும் மேற்பட்ட திருட்டுகள்

## வவுனியா பொலிஸாரால் இருவர் அதிரடிக் கைது

வவுனியா, பெப். 18

வவுனியாவில் பல்வேறு இடங்களில் 30க்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்தபோதே இருவரும் கைதுசெய்யப்பட்டதாகவும், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது பல பொருள்கள் மீட்கப்பட்டதாகவும், 30க்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் அவர்கள் இருவரும் தொடர்புடையவர்கள் எனத் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் நீர் இறைக்கும் மோட்டர்கள், குழாய்க் கிணறு மோட்டர்கள், சிலிண்டர்கள், மின் விசிறிகள் எனப் பல பொருள்களை அவர்கள் திருடியுள்ளமையும் தெரியவந்துள்ளது. (ம-110)




## கற்றல் உபகரணம் கையளிப்பு

கிளிநொச்சி, பெப்.18

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கிறிசலிஸ் நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-9)

## பாதுகாப்பற்ற ரயில் கடவையில் தற்காலிகமான காவல் கடமை!

யாழ்ப்பாணம், பெப். 18

இணுவில் பகுதியில் நிரந்தர ரயில் கடவை சமிக்ஞை அமைக்கப்படும்வரை ரயில் கடவையில் ஏற்படும் அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக அந்தக் கிராமத்திலிருந்து இருவரை காவல் கடமையில் அமர்த்தவும், அவர்களுக்குக் கட்சி நிதியிலிருந்து கொடுப்பனவை வழங்கவும் நடவடிக்கைஎடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இணுவில் பாதுகாப்பற்ற ரயில் கடவைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத் தலைவரும் அவரின் சிசுவும் உயிரிழந்தனர். இதையடுத்து விபத்து ஏற்பட்ட பகுதியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுப் பார்வையிட்டார். இதன்போதே அவர் நிரந்தர சமிக்ஞை அமைக்கப்படும் வரையில் அங்கு இருவரை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தும் விடயத்தை அமைச்சர் தெரியப்படுத்தினார். (ம-100)

## கமக்கார அமைப்புத் தெரிவு

முல்லைத்தீவு, அம்பலப்பெருமாள்குளத்தில், புதிய கமக்கார அமைப்புத் தெரிவு நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கமக்கார அமைப்பின் தலைவராக க. விஜிகரன், செயலாளராக த. மகாலட்சுமி, பொருளாளராக அ. மதியழகன், உப தலைவராக க. சசிகுமார், உப செயலாளராக கு. ரூபகாந், உறுப்பினர்களாக பொ. யோகேஸ்வரன், பொ. குணேஸ்வரன், ச. புஷ்பலதா, கோ. ஸ்ரீலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-13)

# இலவசக் கல்வியை சரியாக பயன்படுத்தி முன்னேறுங்கள்

### கொடிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

யாழ்ப்பாணம், பெப்.18

இலவசமாகக் கிடைக்கும் பொருள்களுக்கு மதிப்பை நாம் வழங்குவதில்லை. ஆனாலும் நாம் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் இந்தக் கல்விக் கட்டமைப்பு தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது என்று கொடிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராசதுரை அபிராமி கூறியுள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தால் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இலவச பாடநூல் மற்றும் இலவச சீருடைத்துணி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தியாவிலுள்ள பாடசாலைகளில் இலவசக்கல்வி முறை இன்மையால் அங்கு அதிக பிள்ளைகள் கற்பதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக இலவசமாகப் பாடசாலையில் கற்பதற்கு சகல மாணவர்களுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. சிறந்த முறையில் கல்வி கற்று எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கு சேவையாற்றக் கூடிய சிறந்த குடிமக்களாக மாணவர்கள் மிளிரவேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (ப-159)

## யாழ். போதனாவில் டிஜிற்றல் வழிகாட்டி

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளர்களின் அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுப் பகுதிக்கு முன்னால் டிஜிற்றல் தொடு திரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. (ப-20)

## மாணவர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, பெப்.18

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தின் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் பா. பாலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-13)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வயல் விழா

வவுனியா, கலசியம்பெலாவயில் வயல்விழா மற்றும் வர்த்தக ரீதியிலான வீட்டுத்தோட்டச் செய்கை தொடர்பான நிகழ்வு வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் பி. அற்புதச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர, வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் மற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-110)



'ஏர் நிலம்' அமைப்பின் 4ஆவது ஆண்டு பொங்கல் விழாவும், மூத்த உழைப்பாளர் மதிப்பளிப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் உள்ள மாவீரன் பண்டாரவன்னியன் சிலைவளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. (ச)




தொல்லியல் திணைக்கள ஒழுங்கமைப்பில் பாரம்பரிய தமிழ்க் கலாசாரம் தொடர்பான விரிவுரை மற்றும் பயிற்சிப் பட்டறை நிகழ்வு யாழ். கோட்டையில் தொல்லியல் திணைக்கள அதிகாரி பா.கபிலன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கலாசாரத் திணைக்கள உத்தியோகத்தர் மார்க்கண்டு அருட்செல்வன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்துகொண்டனர். (ப-125)



அளவெட்டி தெற்கு, கலைவாணி சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு விழா மற்றும் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு என்பன தலைவர் நா.தவஞானம் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. (ப-36)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-9)



யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி, யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயம், யாழ். கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம், யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் நல்லூர்ப் பிரதேசசெயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பாதுகாப்பான புலம்பெயர்வு, ஆட்கடத்தல், மனித விற்பனை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (ப-66)

# புதிய நிர்வாகத் தெரிவு



யாழ்ப்பாணம், பெப்.17

யாழ். ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலை அதிபர் க.சிவநேசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றன. காப்பாளர்களாக அ.சா.அரியகுமார், ச.விஜயகுமார், வே.ஜெயபாலகிருஷ்ணன், தலைவராக க.சிவநேசன், செயலாளராக வி.மன்மதகுமார், பொருளாளராக திருமதி சு.நிலாந்தினி, உப செயலாளராக திருமதி ற.அனுசியா, நிர்வாக உறுப்பினர்களாக வே.சிவநேசன், செ.வேலுப்பிள்ளை, சி.சத்தியவரதன், ஆ.இளங்கோ, த.சாந்தநேசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ப)



யாழ்ப்பாணம் நாகர்கோவில் பெரும் கடற்கரையில் கரைவலை மீன்பிடி நாள் தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுழிபுரம், திருவடிநிலை இந்து மயானம் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்து தற்போது பண்ணாகம், சுழிபுரம் கிழக்கு, மத்தி, மேற்கு, தொல்புரம் மேற்கு ஆகிய கிராம மக்களின் நிதிப்பங்களிப்பில் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது. (ப-125)



தென்மராட்சிப் பிரதேசசெயலக சிறுவர், பெண்கள் பிரிவினரால் கொடிகாமம் தெற்கு, கொடிகாமம் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கான பால்நிலைச் சமத்துவம், பெற்றோரியம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் கொடிகாமம் தெற்கு, பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. (ப-9)



பிரிவெனா மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல் மற்றும் சீருடைத்துணிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி உமாமகள், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இ. தமிழ்மாறன், முல்லைத்தீவு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உ. சுரேஷ்குமார், கரைதுறைப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீபுஷ்பநாதன், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-19)

அனலைதீவு அருணோதயா முன்பள்ளியில் கல்வி கற்ற சிறார்கள் தரம் ஒன்றில் இணையவுள்ளதால் அவர்களைப் பாடசாலைகளுக்கு வழியனுப்பி வைப்பதை முன்னிட்டு முன்பள்ளியில் பிரிவுபசார விழா அண்மையில் இடம்பெற்றது. (ப-9)






கிளிநொச்சி மாவட்ட செயலராகக் கடமையாற்றி தற்போது ஓய்வுபெற்ற திருமதி றூபவதி கேதீஸ்வரனுக்கு பச்சிலைப் பள்ளி பிரதேசசெயலக அலுவலர்களால் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேசசெயலர் தலைமையில் பிரிவுபசார விழா அண்மையில் நடத்தப்பட்டது. (ப-9)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் தமிழ் விக்கிப்பீடியா தொடர்பான கருத்தரங்கு கலாசாலையின் முதல்வர் ச. லலீசன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தமிழ் விக்கிப்பீடியாவை முதன்முதலில் உருவாக்கியவரான இ. மயூரநாதன், பொறியியலாளர் மு. சிவகோசரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். (ப-66)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கான நான்கு நாள்கள் தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி குறித்த பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சிநெறியில் வளவாளர்களாகத் தொழிற்றுறைத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான இ. கௌசிகன் மற்றும் இ. திவாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியை நிலைநாட்டுதல்; இலங்கை பின்னடைவு!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிப்பு

**கொழும்பு, பெப். 18**
**மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி தொடர்பான தரத்தில் இலங்கை பின்னோக்கிச் செல்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**




இதுதொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதி ஆசியப் பணிப்பாளர் மீனாக் ஷி கங்குலி தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்ந்தும் தவறான நிர்வாகம் மற்றும் பொறுப்புக் கூறல் குறைபாடு காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது.

சமூக நீதி மற்றும் உரிமைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்குப் பதிலாக, கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதிலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச கவனத்தை மட்டுப்படுத்துவதிலும் அவதானம் செலுத்தப்படுகிறது. இலங்கையில் ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் மனித உரிமைகள் பாதுகாப்புத் தரம் வேகமாகப் பின்னோக்கிச் செல்கின்றது- என்றார். (ச)

# கட்டுநாயக்காவில் புதிய முனையம்

கொழும்பு, பெப்.18
கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், 31 பயணச்சீட்டு கருபீடங்கள் அடங்கிய புதிய முனையக் கட்டம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்காக 6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலுக்கு 9 மாதங்களுக்குள் தீர்வு காண முடியும் என்று துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். (ச-இ)

# காமினி பெரேரா மறைவு



கொழும்பு, பெப். 18
முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தனது 83ஆவது வயதில் காலமாகியுள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளர்களில் ஒருவருமாவார். காமினி ஜயவிக்ரம பெரேராவின் நலம் விசாரிப்பதற்காக அண்மையில் அவரின் இல்லத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை வருமானம் உயர்வு!

கொழும்பு, பெப். 18
ஜனவரி முதல் நாற்பது நாள்களில் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்குக் கிடைத்த பற்றுச்சீட்டு வருமானம் 52 மில்லியன் ரூபாவைக் கடந்துள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையின் கணக்குப் பதிவுகளின்படி இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பார்வையாளர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 60 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு மில்லியன் எனவும் இதன் மூலம் கிடைத்த வருமானம் 341 மில்லியன் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# 'அஸ்வெசும'வுக்கு இம்முறை அடையாள அட்டை கட்டாயம்

கொழும்பு, பெப். 18
'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களில் அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

முதற்கட்டத்தின் கீழ் அடையாள அட்டை கட்டாயமாக்கப்படவில்லை.

ஒரே நபர் பல விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதைத் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் புது உத்தியைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உறவினர்களின் அன்புத்தொல்லை குறையும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**மிதுனம்:** தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும்.

**கடகம்:** குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்துப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகையை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் குறைவார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**துலாம்:** அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். முன்னேறும் நாள்.

**விருச்சிகம்:** உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம்விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மகரம்:** உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மீனம்:** பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# நாட்டுக்கு வருகைதரும் அமெ. இராஜதந்திரிகள்

கொழும்பு, பெப். 18
அமெரிக்க பொது இராஜதந்திர துணைச் செயலாளர் எலிசபெத் எம். அலன் இலங்கைக்கு வரவுள்ளார்.

இம்மாதம் 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை ஜோர்தான், இலங்கை மற்றும் இந்தியாவுக்கு அவர் பயணம் செய்யவுள்ளார்.

நாடுகளுக்கிடையிலான கூட்டாண்மை மற்றும் கூட்டணிகளை வலுப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அமெரிக்காவின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் முகமாக இந்தப் பயணம் அமையவுள்ளது.

அதேவேளை, அமெரிக்கத் துணை வெளியுறவு செயலாளர் ரிச்சர்ட் வர்மா இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இன்றுமுதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் அவரது இலங்கைப் பயணத்தின்போது அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத் தெரிவு

யாழ்., பெப். 18
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவானது இன்று மு.ப. 10 மணியளவில் தற்போதைய தலைவர் ப.கேசவதாசன் தலைமையில், சங்கானை தலைமைக் காரியாலயத்தில் நடைபெற வுள்ளது. புதிய நிர்வாகத் தெரிவில் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(ஓ.27)

## தேவை

கிளிநொச்சியில் பிரபல விற்பனை நிலையம் ஒன்றிற்கு கணக்காளர், கணக்காய்வாளர்கள்.
வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் உந்துருளி உதிரிப்பாக விற்பனையாளர் உடன் தேவை.
கணினி அனுபவம் கட்டாயம்.

தொடர்பு:- 077 772 2305

## வேலைக்கு ஆள் தேவை (பெண்)

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை.

- வயதெல்லை 30 தொடக்கம் 40 வரைக்கும்
- வேலைநேரம் காலை 7.00 மணிமுதல் மாலை 6.30 மணிவரை
- மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

074 123 5110

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண், பெண் பராமரிப்பாளர் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(CS 54022) S-1

077 810 6857 | 077 154 2067
021 226 5551 | 075 563 1451

## நித்திய பூசைகள்

யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 15km உட்பட்ட ஆலயங்களில் காலை, மாலை நித்திய பூசைகள் செய்து தரப்படும்.

தொடர்பு: 0776894358
-ராஜீவ் ஐயா

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக் கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 070 356 7811

## புடைவைக் கடைக்கு ஆட்கள் தேவை

- ஆண், பெண்
- யாழ்ப்பாணம் Town
- வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை

CS (27934)

தொடர்புகளுக்கு: 077 893 7176, 076 872 3898

## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்டகாணியும், யாழ். பொன்னப்பா வீதியில் 03 பரப்புக் காணியும், யாழ். K.K.S வீதியில் மனோகரா தியேட்டர் அருகிலும் 07 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 723 2535

## வாடகைக்கு உண்டு

கச்சேரிக்கு அருகாமையில் கண்டுக்குழி சோமசுந்தரம் அவெனியுவில் புதிதாகத் திருத்தப்பட்ட 4 அறை வீடு வாடகைக்கு உண்டு.

077 529 1644

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டுப் பராமரிப்பு வேலை செய்வதற்கு 40 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

077 298 7506

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு பஸ் Booking, பார்சல் சேவிஸ் ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

தொடர்பு: 077 386 6250

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் மரத்தளபாடங்கள் (Single bed, Table, Dressing table Dinning Chair) CC TV, Water heater, Oven, Fridge, Washing Machine) உடனடி விற்பனைக்கு.

தொடர்பு: 077 400 2382

## தேவை

நெல், தானியங்கள், தேங்காய், கொப்பறா, [illegible] உழைப்பாளர்கள்.
வேலையாட்கள்.

T.P: 077 7722 215

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிப் பகுதியில் படிக்கும், வேலை பார்க்கும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.
CS / 54009 ) J-1

072 396 7988

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம் 44 A டேவிட் வீதியில் அறைகள் வாடகைக்கு உண்டு

077 666 9055

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985, மகம் நட்சத்திரம், கொழும்பில் Electrician ஆக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

075 771 8340

## வேலையாள் தேவை

யாழ் வணிகர் கழகத்திற்கு கணினி அறிவுள்ள தமிழ், ஆங்கிலம் தட்டச்சு தெரிந்தவரும், கணக்குப் பதிவுநர் அனுபவமும் உள்ள பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:-
யாழ் வணிகர் கழகம்,
இல. 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Email: [illegible]@gmail.com

076 575 4993, 077 723 8629, 021 222 2367

## காணி விற்பனைக்கு

யாழ். மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் முன்பாக உடுவில் - மானிப்பாய் பிரதான வீதியில் 50 அடி முகப்புடன் 5 பரப்புக் காணி அமைந்து வர்த்தக கட்டடங்கள் அமைக்கவும், அதி உயர் வசதியான வீடு கட்டவும் அருமையான காணி.
மொத்த விலை 50 மில்லியன்
(விலை பேசித் தீர்மானிக்கலாம்)
எந்த ஒரு காரணத்திற்காகவும் வேறு தரகர் தொடர்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
SP Karan Construction and real estate (Pvt) Ltd

தொடர்பு:- 0773434005

## காணி / வீடு விற்பனைக்கு

- ஊரெழுவில் 12 பரப்புக் காணியில் பயன்தரு மரங்களுடன் அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.
- கைதடியில் 10 3/4 பரப்புக் காணியை 5 பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

(A9 வீதி 120 அடி முகப்பு / கைதடி சந்தி 200m)

076 662 2216 , 077 203 2880

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 1998ல் பிறந்த, பூர நட்சத்திரம். தனியார் நிறுவனமொன்றில் கடமைபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு: 075 045 8213 (தந்தை)

## காணி விற்பனைக்கு

மூளாயிலுள்ள ஐயனார் கோயில் அருகாமையில் உள்ள 12 பரப்புடைய காணி விற்பனைக்குண்டு.

077 711 6134

## வாடகைக்கு உண்டு

கச்சேரிக்கு அருகாமையில் கண்டுக்குழி சோமசுந்தரம் அவெனியுவில் புதிதாகத் திருத்தப்பட்ட 4 அறை வீடு வாடகைக்கு உண்டு.

077 529 1644

## மரண அறிவித்தல்

தோற்றம் : 22 : 01 : 1936



மறைவு : 15 : 02 : 2024

### கந்தையா சிவகுருநாதன்

(ஓய்வுநிலை களஞ்சியப் பொறுப்பாளர் விவசாயத் திணைக்களம் - S.K)

அளவெட்டி மத்தி பள்ளியவத்தையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, அராலி அகாயக்குளம் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுருநாதன் கடந்த 15.02.2024 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாலரஞ்சிதமலர் அவர்களின் பாசமிகு கணவரும், மீரா (கனடா), அனுரா (மலேசியா), ராஜ்மோகன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (மலேசியா), சத்தியதேவி மற்றும் சுகுணாதேவி (ரூபி - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் மணிமேகலை, ஞானகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கங்காதரன் (கனடா), ஜெயக்குமாரி (கொழும்பு), கஜனா (அராலி), கணாதீபன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆனந்தி (மலேசியா), கஜநாதன், ஜெயப்பிரியா ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும், ஜெனனி, ஜெனனா ஹர்சினி, கஜானன், தருணன், தர்ணிகா, துர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2024) திங்கட்கிழமை அகாயக்குளம் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
பிள்ளைகள்: மீரா, அனுரா, ராஜ்மோகன், கஜநாதன்.
(077 903 6329)

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

## வேலைவாய்ப்பு

வட மாகாணத்தில் கட்டுமானத்துறையில் ஈடுபடும் எமது நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.
ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (HND,NCT (Civil/QS) or Equivalent with 2 years Experience)
2. வெல்டர், தச்சுவேலை செய்பவர்

தொடர்புகளுக்கு: இல.09, நந்தாவில் வீதி, தாவடி, யாழ்ப்பாணம்.
Email: vacancynsc@gmail.com 077 712 0945

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள 3X6 கட்டில்கள் மெத்தையுடன், 24 inch ஜப்பான் தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ கொப்பி / சீடி (CD) கொப்பி தொலைக்காட்சி பெட்டியுடன் இணைந்துள்ளது.

077 728 3811
077 763 4869

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனுக்கு பிரான்ஸ் இராணுவ உதவி

உக்ரைனுக்கு 3.23 பில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது. பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன் மற்றும் உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி இருவரும் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் இருதரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ம)

**காட்சியறைக் கட்டடம் தேவை**

**பிரபல உள்ளூர் / வெளிநாட்டு TILE உற்பத்தியாளர் / விநியோகஸ்தர் கிளிநொச்சி - யாழ்ப்பாணம்**
பிரதான வீதியில் யாழ்நகருக்கு அருகாமையில் காட்சியறையை திறப்பதற்கு ஒரு **வெற்று நிலம்** அல்லது **கட்டடத்துடன் வாடகைக்கு** அல்லது **குத்தகைக்குத் தேவை.**
கொடுக்க ஆர்வம் உள்ளோர் பின்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
071 690 3447
071 328 7004

(CR / 41831) J-1

LOFTY constructions

LOFTY CONSTRUCTIONS (PVT) LTD
நாட்டில் எப்பகுதியிலும் உங்கள் கனவு இல்லத்தை உங்களது காணியிலேயே நிர்மானித்துத் தரப்படும்.
















35% முற்பணம் செலுத்தி மீதி தவணை முறையில்
100 புதிய நவீன வீட்டுத்திட்டங்களுடன்

இல. 631/A/1/2, நீர்கொழும்பு வீதி, வத்தளை
Mr. Laxman - 074 3903205
தமிழில் தொடர்புகொள்ள 0743 903 197
011 45 49 220 | 077 77 00 738

# ரஷ்யப் படைகளிடம் வீழ்ந்தது அவ்திவ்கா



**கீவ், பெப். 18**
**உக்ரைனின் கேந்திர முக்கியத்துவம்மிக்க அவ்திவ்கா நகரம், ரஷ்யப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதை உக்ரைன் இராணுவமும் உறுதிப்படுத்தியுள்ளது.**

முன்னதாக இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையொன்றின்போது கிரீமியக் குடா ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டது. துறைமுக நகரான இந்த நகரம் பிரதான கப்பல் போக்குவரத்துப் பாதையாகவும், கேந்திர முக்கியத்துவம்மிக்கதான இடமாகவும் உள்ளது.

எரிவாயு மற்றும் எரிபொருள் முக்கியத்துவம் மிக்க இந்தக் குடாவால் வருடத்துக்கு மில்லியன் டொலர் பெறுமதியான வருவாயை ரஷ்யா ஈட்டி வருகின்றது.

தற்போதைய இராணுவ நடவடிக்கையின் முடிவில் ரஷ்யா கிரீமியக் குடாவுக்கு அருகிலுள்ள நகரங்களைக் கைப்பற்றி அதை ஆக்கிரமிக்கச் சாத்தியமுள்ளதாகக் கருதப்பட்ட நிலையிலேயே, கிரீமியாவுக்கு அருகிலுள்ள இயற்கை வளம் மிகுந்ததும் கேந்திர முக்கியத்துவம் மிக்கதுமான அவ்திவ்கா நகரை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளன. அவ்திவ்கா நகரில் இருந்து தமது படையினர் பின்வாங்கியுள்ளதாக உக்ரைனின் புதிய இராணுவத் தளபதி ஜெனரல் சிர்ஸ்கியி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் ரஷ்யப் படையினர் உக்ரைனின் பக்முட் நகரைக் கைப்பற்றினர். அதன் பின்னர் ரஷ்யாவுக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றி இதுவென பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (ம)



# நவால்னி இறப்பு: பின்னணியில் சதி

மொஸ்கோ, பெப். 18
ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரான நவால்னி சிறைக்குள் உயிரிழந்தமையின் பின்னணியில், சதித்திட்டம் உள்ளதாக அமெரிக்காவின் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

நவால்னி இறப்பதற்கு முதல்நாள், அதாவது நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட அவரது வீடியோவொன்று ரஷ்ய ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் நவால்னி சிரித்த முகத்துடனும், நகைச்சுவை உணர்வுடனும், நல்ல உடலாரோக்கியத்துடனும் இருக்கின்றார் என்பது தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றது.

அதேநேரம், நவால்னியின் மரணத்துக்கு ரஷ்யா தான் பொறுப்பு எனத் தெரிவித்துள்ளார் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் பிளிங்கன். (ம)

# ட்ரம்புக்கு தண்டம்

வொஷிங்டன், பெப். 18
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தன்னுடைய சொத்து மதிப்பு குறித்து பொய்யான தகவல்களை வழங்கியமைக்காக 35.5 கோடி டொலர் அபராதம் விதித்து நியூயோர்க் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தத் தீர்ப்பின் காரணமாக ட்ரம்ப் குடும்பத்தினர் நடத்திவரும் வணிக நிறுவனம் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதுடன், நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டிய கட்டாயமும் நேர்ந்திருக்கிறது.

டொனால்ட் ட்ரம்ப் மட்டுமல்லாமல் அவருடைய இரு மகன்களும் இந்த முறைகேட்டில் ஈடுபட்டமையால் அவர்கள் மூவரும் நியூயோர்க் பகுதியில் அடுத்த மூன்றாண்டுகளுக்கு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடமுடியாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

# பலஸ்தீன அகதிகளுக்காக எகிப்து தனிக்கட்டுமானம்!

ஜெருசலேம், பெப். 18
காஸாவுடனான எகிப்தின் எல்லையில் விரிவான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதைக் காட்டும் செயற்கைக்கோள் படங்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கட்டுமானங்களை எகிப்து மேற்கொள்கின்றது என்றும், அவை பலஸ்தீன அகதிகளைத் தங்கவைப்பதற்கான முன்னேற்பாடு என்றும் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அந்தச் செய்திகளை எகிப்து மறுத்துள்ளது.

அகதிகளைத் தங்கவைக்க எகிப்து கட்டுமானங்களை மேற்கொள்கின்றது என்றால், அது பலஸ்தீன அகதிகளை இஸ்ரேல் வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதற்குக் காரணமாக அமையும் என்பதாலேயே இந்தக் கட்டுமானங்கள் பலஸ்தீன அகதிகளுக்காக அமைக்கப்படுகின்றது என்பதை எகிப்து ஏற்கத் தயங்குகின்றது என்று மேற்கத்தேய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
பாராட்டி வாழ்த்துகின்றோம்
ஊரெழு கானலய நுண்கலைப் பயிலகம் வழங்கும்
மிருதங்க அரங்கேற்றம்
செல்வன். விஜிந்தன் எந்துஷன்
இடம்: காமாட்சி அம்பாள திருமண மண்டபம்
(பலாலி றோட் உரும்பிராய்)
காலம்: 18.02.2024 நேரம்: பிற்பகல் 02.00 மணி
ஞாயிற்றுக்கிழமை

இவர் மேன்மேலும்
பல் கலையும்
பயின்று வளர்ந்து
மிளிர
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பம்மா குடும்பம்,
அத்தைமார் குடும்பம்.
(CS 27939) S-1

1ஆம் ஆண்டு நினைவலைகள்
மலர்வு 28 . 12 . 1948
உதிர்வு 02 . 03 . 2023

அமரர் சதாசிவம் இராமலிங்கம்
ஆண்டு ஒன்று ஆனதுவோ
அப்பா உம்மை நாமிழந்து
ஆறாது எம் துயரம் நீர் இன்றி
எம் அருகில் நிழலாகி
பத்திரமாய் எமை பார்த்துக்கொள்ளும்
நிகரில்லா நின் ஆன்மா
நிம்மதியாய் சஞ்சரிக்க
நித்தம் உம் நினைவுகளோடு
சுற்றமும் நாமும்
குடும்பத்தினர்.
மடத்தடி மேற்கு வீதி,
சாவகச்சேரி.
(CS 27952) A-1.

# இறால் குஞ்சுகள் விடும் நிகழ்வு

வவுனியா, பெப்.18

கமத்தொழில் மற்றும் பெருந் தோட்டத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறியளவிலான விவசாய, வணிக மீண்டெழுதல் திட்டத்தின் கீழ் வவுனியா, ஆசிக்குளம் கிராமஅலுவலர் பிரிவி லுள்ள 6 குளங்களில் 2 இலட்சத்து 35 ஆயிரம் இறால் குஞ்சுகள் விடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இணைப்பாளர் எஸ். ஏச். ஏ. அஸ்ரவ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ஈஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வி. முகுந்தன், மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன், தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதி காரசபையின் அதிகாரி யோ.நிசாந்தன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-110)

உடனடி வேலைவாய்ப்பு
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்பனிக்கு முகாமையாளர், உத்தியோகத்தர்கள் வடமாகாணம் முழுக்க தேவை.
O/L, A/L தகுதியுடன்.
076 112 4145

வீட்டுப் பணிப்பெண் தேவை
யாழ் திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
T.P: 077 308 3007

பணிப்பெண் தேவை
வீட்டிலே தங்கியிருந்து குழந்தையை பராமரிக்கக் கூடிய வீட்டு வேலை தெரிந்த பணிப்பெண் தேவை.
இடம் : மானிப்பாய்
T.P: 076 4414 749

பணிப் பெண் தேவை
யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.
உணவு தங்குமிடம் இலவசம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
077 3866 250

கடை வேலைக்கு ஆள் தேவை
திருநெல்வேலியில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆள் தேவை (பெண்)
வயதெல்லை 20-30.
வேலை நேரம் 9AM-7PM
சம்பளம் 30000. அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது.
தொடர்பு:
076 306 3306

# விமானப்படை ஏற்பாட்டில் வடக்கில் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை விமானப்படை தனது 73ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு 'நட்புச் சிறகுகள்' என்ற பெயரில் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் வடபகுதியில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது என்று விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் உதேனி ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வீடு வாடகைக்கு
யாழ். இந்துக் கல்லூரிக்கு எதிரில், K.K.S வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
077 213 3432
(cr.41835) (N-1)

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள 73 பாடசாலைகளுக்கு 73 ஆயிரம் நூல்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 3ஆம் திகதி காலிமுகத்திடலிலிருந்து ஆரம்பமாகி 7ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முடிவடையும் விமானப் படையினரின் 650 கி.மீ சைக்கிள் ஓட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை விமானப்படையினரின் கண்காட்சி ஒன்றும் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. 125 மில்லியன் ரூபா செலவில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (எ-6)

வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சமையலாளர்-யாழ்ப்பாணத்து பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். (சம்பளம் 75000 தொடக்கம் 100000 வரை)
சமையல் உதவியாளர் -(முன் அனுபவம் தேவை)
துப்புரவுப் பணியாளர்.
நேரில் சமுகம் தரவேண்டிய முகவரி:
077 872 9806
195, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
195, Temple Road, Nallur, Jaffna.

உடல் எடை குறைய வேண்டுமா?
◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
பால்மா குளிசை - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.
தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
தலைமுடி வளரவேண்டுமா? பேன். பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி. இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய
உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா
எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு
கருமை நிறம் நீங்க வேண்டுமா?
077 2... 155 221. நாவலர் றோட். யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திய மீனவருக்குச் சிறை

# கச்சதீவு உற்சவத்தை புறக்கணிக்க முடிவு

இராமேஸ்வரம், பெப். 18


எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கைது செய்யப்பட்ட மூன்று தமிழக மீனவர்களுக்கு சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்ததைக் கண்டித்தும், நீதிமன்றத் தீர்ப்பை உடனடியாக இல்லாமலாக்க வலியுறுத்தியும், கச்சத்தீவு திருவிழாவைப் புறக்கணிப்பதுடன் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபடப் போவதாக இராமேஸ்வரம் மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

"23 மற்றும் 24 ஆம் திகதிகளில் கச்சதீவில் நடைபெறவுள்ள புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் கலந்துகொள்ளாமல் புறக்கணிக்கவுள்ளோம். விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளோம். மீன்பிடி விசைப்படகுகளில் கறுப்புக்கொடியேற்றி எங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தப்போகின்றோம். இராமேஸ்வரத்தில் இருந்து நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு விசைப்படகு மீனவர்கள் அனைவரும் 3 நாட்கள் நடந்து சென்று தங்களது படகு உரிமம், மீனவர் அடையாள அட்டை உள்ளிட்டவைகளை ஆட்சியரிடம் ஒப்படைப்பதெனவும் முடிவெடுத்துள்ளோம்" என்று இராமேஸ்வரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-27)

# சந்தேகநபரின் விவரம் கோரும் பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப். 18

தெல்லிப்பழையில் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் பற்றிய விவரங்களை வழங்கி உதவுமாறு தெல்லிப்பழைப் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். 0770249148 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்குத் விவரங்களைத் தெரியப்படுத்துமாறும் தெல்லிப்பழைப் பொலிஸார் கேட்டுள்ளனர். (ஒ-66)



## ஒரு...

தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் வலி. வடக்கு காணி விடுவிப்புத் தொடர்பாக அண்மையில் ஆராயப்பட்டது. யாழ். மாவட்டச்செயலர் அ.சிவபாலசுந்தரனும் பங்கேற்றிருந்தார். விவசாயக் காணிகள் விடுவிப்பு, இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலுள்ள ஆலய வழிபாட்டுக்கான அனுமதி என்பன தொடர்பில் அங்கு ஆராயப்பட்டிருந்தன. இந்த நிலையில், வலி. வடக்கிலுள்ள விவசாயக் காணிகளை மக்களிடம் மீள ஒப்படைப்பது தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை ஒரு மாதத்துக்குள் வெளிப்படுத்துமாறு கோரி இராணுவத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இராணுவத்தினர் தம் வசம் வைத்துள்ள 700 ஏக்கர் விவசாயக் காணியில் முதல் கட்டமாக 300 ஏக்கர் வரையில் விடுவிப்பதற்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் என்று அறியமுடிகின்றது. (அ-ஒ-125)

இதேவேளை - கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 48 மணி நேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க மன்னார் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. (அ-ஒ-26-56)

## '13'ஐ முதலில்...

கட்சி அறிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான திலங்க சுமதிபால தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி முறைமையால்தான் இந்நாடு சமஷ்டி முறைமைக்குச் சென்று, பிரிவினைவாதம் தலைதூக்கியது. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நீக்காமல், ஜனாதிபதி முறைமையை நீக்கமுடியாது. ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு, அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கினால் ஆளுநர் நியமனம் மற்றும் முதலமைச்சருக்குள்ள அதிகாரம் எவை என்பன தொடர்பிலும் பிரச்சினை ஏற்படும்" - என்றார். (அ-ஒ-44)

## கொடூர...

தலைமன்னார், ஊர்மனை கிராமம் பகுதியில் 10 வயதுச் சிறுமி கடந்த வியாழக்கிழமை காணாமல் போயிருந்தார். இரவிரவாக சிறுமியை ஊர்மக்கள் தேடியபோதும், விடிகாலையே அங்குள்ள தென்னந்தோப்புக்குள் சடலமாக அவர் மீட்கப்பட்டிருந்தார். சிறுமியின் தாயும் தந்தையும் புத்தளம் - பூக்குளம் கிராமத்தில் வசித்து வருவதுடன், பாடசாலை செல்வதற்காகச் சிறுமியும் அவரது இரு மூத்த சகோதரிகளும் சகோதரனுடன் அம்மம்மாவின் வீட்டில் வசித்துவந்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் வீட்டுக்கு அருகிலுள்ள தென்னந்தோப்பில் வேலை செய்த 52 வயதான திருகோணமலை - குச்சவெளியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

சிறுமியின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு நேற்று உடற்கூற்றுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. சட்டமருத்துவ நிபுணர் செல்லத்துரை பிரணவன் உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்டு பொலிஸாரிடம் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

சிறுமி மிகக் கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னர் மெல்லிய நூல் அல்லது அதுபோன்ற ஒன்றால் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். சிறுமியில் உடலில் அடி காயங்கள் காணப்படவில்லை. சில கீறல் காயங்கள் காணப்படுகின்றன என்றும் சிறுமியின் உடலில் இருந்து சில மாதிரிகள் மேலதிக சோதனை நடவடிக்கைக்காக எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## மரக்கட்டையில்...

தவறணைக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பியுள்ளார். அப்போது தேவிபுரம் 'ஆ' பகுதியில் உள்ள வீதியில் குறுக்கே விழுந்து கிடந்த மரக்கட்டையுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. படுகாயமடைந்த அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-13-19)

## புலிகளின்...

அனுமதியுடன் தோண்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ஒ-19)

## தமிழ்...

தடுத்தல் அதன் பாவனையை முற்றாக ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுக்கவேண்டும்" என்பன போன்ற கட்டளைகளை இந்தக் கலந்துரையாடலில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க பிறப்பித்தார். (அ-ஒ-20-26)


வேலையாட்கள் தேவை
தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
1. விற்பனையாளர்
2. கணக்காளர்
3. திருத்துநர் (Repair)
அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
யாழ் மொபைல்: 077 361 1282
CS (27945) V-1

வேலையாட்கள் தேவை
> கணக்காளர் : (பகுதி நேரம்)
> வாகனச்சாரதி : (AD கன்ரர்)
> தளபாடங்களுக்கு வாணிஸ் பூசுதல்
"நிரந்தர வேலையாய்ப்பு"
-யாழ்ப்பாணம்-
தொடர்பு: 076 821 9414

உடன் தேவை
யாழ் நகரில் உள்ள பலசரக்கு வியாபார கடைக்கு கணினி மூலம் சிட்டை எழுதுநர் பெண் தேவை.
தொடர்பு: 077 459 8248

காணி விற்பனைக்கு
புத்தூர் - மட்டுவில் பிரதான வீதியில் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
2 பரப்பு - 5 லட்சம்.
கையிருப்பில் 40 துண்டுகள் மாத்திரம் உள்ளது.
தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்:
காலை: 8.30 - மாலை 6.00
தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

சாரதி தேவை
சிறிய கன்ரர் வகை வாகனம் ஓட்டுவதற்கு கனரக வாகன சாரதி தேவை.
T.P: 0777222130

வாடகைக்கு
இருபாலைச் சந்திக்கும் கோப்பாய்ச் சந்திக்கும் இடையில் காணி/ வீடு/ கடை வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: 077 569 3154

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மலலாகம் | கொக்குவில்
ACADEMIC YEAR
2024
தமிழ் மொழி மூலம்; English Medium
Class Started on
19.02.2024
Monday @ 03.20 pm
"Aharam, The prosperous future of our nation's children".

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மலலாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு
2024
தமிழ் மொழி மூலம்; English Medium
ஆரம்பம் :
19.02.2024
மாலை-3.00 மணி
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுத்திகரிப்புப் பணியாளர்கள் தேவை

**யாழ். போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்பு** பணியினை மேற்கொள்ள **சுத்திகரிப்புப் பணியாளர்கள் தேவை.** சம்பள சபையினால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவு மற்றும் EPF,ETF வழங்கப்படும். ஆர்வமுள்ளோர் **நேர்முகத் தேர்விற்கு** சமுகமளிக்கவும்.

**காலம்** :- 19.02.2024 தொடக்கம் 24.02.2024 வரை
**நேரம்** :- காலை 9.00 - மாலை 5.00 மணி வரை
**இடம்** :- 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
வயதெல்லை 18 தொடக்கம் 55 வரை

**தொடர்பு: 077 698 0049**

## சிறுநீரகம் தேவை

O⁻ இரத்த வகை உடைய ஆண் ஒருவருக்கு சிறுநீரகம் தேவை
தொடர்புகளுக்கு: **078 582 8666**

## PRSONAL CLASSES

- ENGLISH
- GRADE 6-11
- HOME VISITS

**S.V.Ananth (BA)**
Contact No: **077 911 5962**

CS (27933) V-1

## வாகனம் தேவை (சிங்கிள் கப்)

**பொலிறோ, சுப்பர் ஏஸ், செனோன்** (சிங்கிள் கப்) **வாகனங்கள்** வாங்கப்படும்.
தொடர்பு :- **0741737684**

(CS/54019) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு **பெண் வேலையாட்கள்** தேவை. வயது எல்லை 20-35 க்குட்பட்ட A/L படித்த, அத்துடன் அடிப்படைக் **கணினி** அறிவுடைய **பெண்கள்** விரும்பத்தக்கது.
தொடர்பு:- **077 353 3809**
**077 120 4652**

(CS/54005) J-1

## காணி விற்பனைக்கு

கொக்குவில், குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் கேணியடி ஒழுங்கையில் இருந்து 100m தூரத்தில் 3 பரப்பும் 3.75 குழியும் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.
**077 443 4501**

(CS/53997) J-1

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

**யாழ் இந்துக்கல்லூரி வீதியில்**
**தனி, குழு வகுப்பு**
**ஆண்டு 7 to GCE OL , AL,**
**பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.**
K.Ganesh B.A **077 766 8725**

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**077 986 5457**

(CS/27915)

## பணிப்பெண் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள வீட்டிற்கு தங்கி நின்று வீட்டு பராமரிப்பு, சமையல் வேலை செய்யக்கூடிய 35 - 45 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.
**தொடர்புகளுக்கு**
**0777 888 325**

## காணி விற்பனைக்கு

நாவற்குழி A9 வீதியில் பனை அபிவிருத்திச் சபைக்கு முன்பாக 400 m தூரத்தில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: **077 608 7502**

(cs.53966) (N-1)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டு சந்தைக்கு மிக அருகாமையில் 1 1/4 பரப்பளவு கொண்ட செவ்வக காணி விற்பனைக்கு. சுப்பர் மார்க்கெட் கட்டுவதற்கு மிகவும் உகந்தது. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்புகளுக்கு: **076 879 3951**

## வாடகைக்கு


**ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நான்கு மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு.** (K.K.S றோட் சிக்னல் சந்தியில் இருந்து 50 m தூரம்) ஒருமாடி 2000 சதுர அடி நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
**தொடர்புகளுக்கு:**
**077 735 3067**

## காணி விற்பனைக்கு

புலோப்பளை, பளையில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :-
**076 564 7848**

(CS/534001) J-2

# மரண அறிவித்தல்



தோற்றம் 31.08.1959 மறைவு 17.02 2024

## சேனாதிராஜா ஜெயேந்திரன் (காந்தன்)

77/61, இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சேனாதிராஜா ஜெயேந்திரன் (காந்தன்) நேற்று (17.02.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா மற்றும் அன்னபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அருள்ராஜா - சிவயோகம் தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தியின் அன்புக் கணவரும், ரெனின், ரஜீவன், கிருசிகா, ரதீசன், கனுசிகா, நிவிசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபா, தீபிகா, ஆதவன், பிரதாயினி, அஜிதன், ரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான ரவீந்திரன், ஜெயந்திரா மற்றும் பிரேமினி, நடனேந்திரன், விஜயேந்திரன், கிருஷ்ணவதனி, அனுஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயரட்ணராஜா, சிவகுமார், சசிகலா, அபிராமி, பத்மசிறி, ஜெயராணி, ஜெயதேவி, ஜெயகுமாரி, றஞ்சி, சிவகுமார், ரவீந்திரகுமார், பிறிந்தி, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும், அன்ருசன், ஆயுஸ்மன், ஆரியன், அஸ்மிதா, கர்சிதா, தக்சிதா, தர்சிதன், யஸ்மினா, ஹரீஸ், அஸ்வின், அர்வின், அபர்னா, கிருத்திக், அஸ்விகா, தியானிகா, கியாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2024) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

**77/61, இராமநாதன் வீதி, கலட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**Rathesan - 077 367 7099**
**Rajeevan - 075 988 1000**
**Renin - 077 721 1763**

(CS54021)N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 18.02. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விட்டும் இனிமேல் சிட்டவே சிட்டாது எண்டு தெரிந்துவிட்டால் பட்டெண்டு நாலுபேரை வைச்சு கேஸுகளை போட்டுக்கீட்டு புளுகப்படுவதே சாணக்கியமாம் அறி!

– கொரோனாச் சித்தர்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2053 | மாசி 06 | ஞாயிற்றுக்கிழமை (18.02.2024) | சிகரம் : 185

நிலாந்தன்



# ஒரு பல்கலைக்கழகமும் ஒரு இசை நிகழ்ச்சியும்

பாடசாலைகளை, பல்கலைக்கழகங்களைக் கட்டுவது உன்னதமானது. புலம்பெயர்ந்து போன எல்லாத் தமிழர்களும் தாயகத்துக்குத் திரும்பி வருவதில்லை. தாயகத்துக்குத் திரும்பி வரும் எல்லோருமே தாயகத்தில் முதலீடு செய்வதில்லை. தாயகத்தில் முதலீடு செய்பவர்களிலும் மிகச்சிலர்தான் கல்வித்துறையில் முதலீடு செய்கிறார்கள். ஆளில்லா ஊரில் ஆலயங்களைக் கட்டுவதை விடவும் கல்விச்சாலைகளைக் கட்டுவது மகத்தானது. அப்படி ஒரு முதலீடுதான் கந்தர்மடம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நோர்தேன் யுனி என்று அழைக்கப்படும் தனியார் பல்கலைக்கழகம். போட்டிக் கல்வி வியாபாரமாக மாறிய ஒரு கல்விச்சூழலில், ஒரு முதலாளி கல்வியில் முதலீட்டைச் செய்யும் பொழுது அங்கேயும் வியாபார இலக்குகள் இருக்கும். ஆனால் தனது முதலீட்டை விளம்பரப்படுத்துவதற்காக சினிமாத் துறைப் பிரபலங்களை கொண்டு வரும்போது தான் சர்ச்சை எழுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ மிஷனரிகளும் இந்து மத மறுமலர்ச்சியாளர்களும் போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு பிரதேசம்தான் யாழ்ப்பாணம். நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது அவ்வாறு போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு போக்கின் தேறிய விளைவு. அமெரிக்காவில் தமது சுகபோகங்களைத் துறந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து பள்ளிக்கூடங்களைக் கட்டிய மிஷன் தொண்டர்கள். ஊரூராக பிடியரிசி சேர்த்து இந்துக் கல்லூரிகளைக் கட்டிய இந்து மறுமலர்ச்சியாளர்கள் என்ற மகத்தான முன்னுதாரணங்கள் ஈழத்தமிழர்களுக்கு உண்டு.

இம்மாதம் ஆறாந்திகதி உடுவில் மகளிர் கல்லூரியில், அந்தக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் தொடங்கின. சரியாக 200 ஆண்டுகளுக்கு முன் திருமதி ஹரியற் வின்சிலோ என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பெண், தனது 28ஆவது வயதில் உடுவில் மகளிர் கல்லூரியைத் தொடங்கினார். தென்னாசியாவில் விடுதி வசதியோடு கூடிய முதலாவது பெண்கள் பள்ளி அது. யாழ்ப்பாணத்தில் ஹரியற் அம்மையார் தங்கியிருந்த காலத்தில் அவருடைய ஐந்து பிள்ளைகள் தொற்று நோய்க்கு இரையானார்கள். அமெரிக்காவுக்கு படிப்புக்காக அனுப்பப்பட்ட அவருடைய ஆண்பிள்ளை கடல் பயணத்தில் இறந்து போனார். தொடர்ச்சியான தனிப்பட்ட இழப்புகளால் நொருங்கிப்போன ஹரியற் தன்னுடைய 37ஆவது வயதில் இறந்து போனார். அவரோடு சேர்ந்து பணிபுரிய வந்த அவருடைய இரண்டு சகோதரிகள் அவருக்குப் பின் இறந்து போனார்கள். தன் மூன்று சகோதரிகளோடு சேர்ந்து பணிபுரிவதற்கென்று அமெரிக்காவிலிருந்து வந்த மற்றொரு சகோதரி யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கிய பின்னர்தான் தன்னுடைய ஏனைய மூன்று சகோதரிகளும் உயிரோடு இல்லை என்பதை அறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தின் கல்வியைக் கட்டியெழுப்புவதற்காக எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்து சந்நியாசிகள்போல வாழ்ந்து. தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் மதம் மாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவர்களுடைய செயற்பாடுகளுக்கு எதிராக இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் பள்ளிக்கூடங்களைக் கட்டியெழுப்பினார்கள். மிஷன் பள்ளிக்கூடங்களை எதிர்கொண்டு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் சுதேசிகளின் பள்ளிக்கூடங்களைக் கட்டினார். அவ்வாறு பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு அவர் பிடியரிசித் திட்டம் என்ற ஒரு சமூகப் பங்களிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிராமங்கள் தோறும் பிடியரிசி சேகரிக்கப்பட்டு. அந்த நிதியில் யாழ். இந்துக் கல்லூரி உட்படப் பல்வேறு சுதேச பள்ளிக்கூடங்களை

> தென்னிந்திய வணிக சினிமாவானது மேலோட்டமானது: தமிழ்ப் பொதுப் புத்தியைச் சுரண்டுவது அல்லது அவமதிப்பது. தமிழில் ஜனரஞ்சகமானவற்றுள் பெரும்பாலானவை மேலோட்டமானவை; ஆழமற்றவை: அறிவுக்கு விரோதமானவை. இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவைக் கட்டியெழுப்பும் ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு ஜனரஞ்சகமான விளம்பர உத்தி ஒன்றைத் தெரிந்தெடுத்த விடயத்தில் அந்த முதலீட்டாளர் தவறிழைத்து விட்டார்.

இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளையைச் சேர்ந்தோரும் கட்டினர். உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து சில கிலோமீற்றர் தூரத்தில் மருதனார் மடத்தில் ராமநாதனின் கல்லூரி கட்டப்பட்டது. அந்தப்பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகிய திருமதி லீலா ராமநாதன் ஒரு அவுதிஸ்ரேலியப் பெண். அவருடைய சேவையை வியந்து போற்றுபவர்கள் அவருடைய வெண்ணிறப் பாதங்களில் அந்த ஊரின் செம்பாட்டுச் சாயம் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள்.

இவ்வாறு எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரப் பெண்களும் ஆண்களும், உள்ளூரில் சைவசமய மறுமலர்ச்சியாளர்களும் கல்விச்சாலைகளைக் கட்டியெழுப்பியபோது அவர்கள் அதை அதிகபட்சம் தொண்டாகவே செய்தார்கள். கல்விப்பணி என்பது உன்னதமான ஒரு தொண்டாகக் கருதப்பட்டு, போற்றப்பட்ட காலகட்டம் அது. இப்படிப்பட்ட கல்விச்சாலைகளைக் கட்டும் ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்து நோர்தென் யுனியைப் பார்க்க வேண்டும். அந்தப் பல்கலைக்கழகம் கட்டப்பட்டிருக்கும் கந்தர்மடம் சந்தியில் இருந்து அரசடிச் சந்தியை நோக்கி வரும் கந்தர்மடம் வீதியில், முன்பு ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை இருந்தது. அங்கே மாணவர்களின் வரவு குறைந்தபடியால் அந்தப்பள்ளிக்கூடம் மூடப்பட்டுப் பின்னர் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் இப்பொழுது ஏதோ ஒரு அரச கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தச்சிறிய பள்ளிக்கூடத்துக்கு ஈழப்போரில் ஒரு முக்கியத்துவம் உண்டு. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தல் நடந்த பொழுது சைவப்பிரகாச வித்தியாசாலை ஒரு வாக்களிப்புச் சாவடியாக இருந்தது. மாவட்ட அபிவிருத்திச்சபையை ஏற்றுக் கொள்ளாத விடுதலைப் புலிகள் இயக்கம் அந்தச் சாவடியில் காவலுக்கு நின்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். இப்பொழுது மாணவர்கள் இல்லை என்பதால் அந்தப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது. பலாலி வீதியில் வந்து ஏறும் சந்தியிலேயேநோர்தேன் யுனி கட்டப்பட்டிருக்கிறது.

கனடாவில் வசிக்கும் தமிழ் முதலீட்டாளர் அதைக் கட்டியிருக்கிறார். தனது தாயகத்தில் அவர் முதலீடு செய்ய விரும்புகிறார். குறிப்பாக அதனைக் கல்வித் துறையில் முதலீடு செய்ய விரும்புகிறார். தமிழ் மக்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் வேண்டும். தமிழ்மக்கள் தங்களுக்கு வேண்டிய துறைகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தில் தங்கியிராத அதுபோன்ற பல்கலைக்கழகங்கள் வேண்டும். அந்த அடிப்படையில் அந்த முதலீட்டை வரவேற்க வேண்டும். அந்த முதலீட்டாளரின் மனைவி இந்தியாவின் சினிமாப் பிரபலங்களில் ஒருவரான ரம்பா. அதனால் அந்தப்பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்த முயன்ற முதலீட்டாளர் தன்னுடைய மனைவியின் துறைசார்ந்து சிந்தித்து விட்டார். தன் மனைவியின் துறை சார்ந்த பிரபலங்களை கொண்டு வந்து பெருமெடுப்பில் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவதன்மூலம் தனது பல்கலைக்கழகத்துக்குப் பொருத்தமான விளம்பரம் கிடைக்கும் என்று அவர் கருதியிருக்கலாம்.

தமிழ் வெகுசனப் பண்பாட்டில் சினிமாவின் தாக்கம் வலியது. பெருந்தமிழ் பரப்பில், குறிப்பாக தமிழகத்தில், அரசியல் எனப்படுவது ஏதோ ஒரு விகிதமளவுக்கு சினிமாவின் நீட்சியும் அகட்சியும்தான். ஊடகமாகட்டும் பொழுதுபோக்கு ஆகட்டும், எல்லாவற்றிலும் சினிமாவின் தாக்கம் உண்டு. கேபிள் தொலைக்காட்சி எனப்படுவது சுந்தரராமசாமி கூறுவது போல வீட்டுக்கு வந்த திரைப்படம்தான். அது வீட்டின் வரவேற்பறையில் எப்பொழுதும் இருப்பது. எனவே தமிழ்ப் பொது உளவியலின் மீது தமிழ்ச் சினிமாவின் செல்வாக்குப் பெரியது.

தென்னிந்திய வணிக சினிமாவானது மேலோட்டமானது; தமிழ்ப் பொதுப் புத்தியைச் சுரண்டுவது அல்லது அவமதிப்பது. தமிழில் ஜனரஞ்சகமானவற்றுள் பெரும்பாலானவை மேலோட்டமானவை; ஆழமற்றவை; அறிவுக்கு விரோதமானவை. இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவைக் கட்டியெழுப்பும் ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு ஜனரஞ்சகமான விளம்பரஉத்தி ஒன்றைத் தெரிந்தெடுத்த விடயத்தில் அந்த முதலீட்டாளர் தவறிழைத்து விட்டார். நிகழ்வில் கூடிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவர் மேடையில் பேசுகிறார். தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் புலம்பெயர்ந்து போன நாட்டில் இருந்து வந்திருப்பதாகக் கூறுகிறார். ஆனால் கூட்டம் அவருக்கு

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிச் செய்திகளின் ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும்



இ.யசீகரன்

உலகளாவிய ரீதியில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் பாரதூரமான அச்சுறுத்தலாகவும் சர்வதேச மற்றும் உள்நாட்டு, சமூக மற்றும் அரசியல் பிளவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு ஏதுவான காரணியாகவும் தவறான தகவல் பகிர்வு (Misinformation and Disinformation) மற்றும் போலிச் செய்திகளின் (Fakenews) பரவல் காணப்படும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகப் பொருளாதார மன்றத்தின் 2024ஆம் ஆண்டுக்கான உலகளாவிய இடர் அறிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பில் நிபுணர்களின் கூற்றுப்படி, தேர்தல்களுக்கான முன்னோடியில்லாத ஆண்டில், உலகெங்கிலும் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் முக்கியமான அச்சுறுத்தல்களில் ஒன்றாக தவறான தகவல் (False Information) காணப்படும் எனத் தெரிவிக்கின்றனர். பொருளாதார, சுற்றுச்சூழல், புவிசார் அரசியல், சமூக மற்றும் தொழில்நுட்ப அபாயங்கள் உள்ளிட்ட 34 காரணிகளை உள்ளடக்கிய தரவரிசையின் அடிப்படையில், அடுத்த இரண்டு ஆண்டுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்ட நாடுகளின் தெரிவுகளில், தவறான தகவல் பகிர்வு மற்றும் போலிச் செய்தியின் பரவல் முதன்மை அச்சுறுத்தலாக இருக்கும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

உலகளாவிய அபாயங்கள், குறுகிய கால மற்றும் நீண்ட கால தீவிரத்தன்மையின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் குறுகிய கால அச்சுறுத்தல்களை அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஏற்படும் அச்சுறுத்தல்கள் என்ற அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தவறான தகவல் பகிர்வு மற்றும் போலிச்செய்திகளின் அச்சுறுத்தல் என்ற விடயம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த அச்சுறுத்தல்களாக மோசமான வானிலை நிகழ்வுகள், சமூக துருவமயப்படுத்துதல், சைபர் பாதுகாப்பின்மை, பிராந்தியங்களுக்கு இடையேயான ஆயுதமோதல், பொருளாதார வாய்ப்பின்மை, பணவீக்கம், தன்னிச்சையான இடம்பெயர்வு, பொருளாதார வீழ்ச்சி, சூழல் மாசு ஆகிய காரணிகளும் முக்கியம் பெறுகின்றன.


அதேபோல் நீண்டகால அச்சுறுத்தல்கள் என்ற அடிப்படையில் மோசமான வானிலை நிகழ்வுகள், புவியியல் அமைப்புசார் முக்கியமான மாற்றங்கள், பல்லுயிர் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்குலைவு, இயற்கை வளங்களின் பற்றாக்குறை, தவறான தகவல் மற்றும் போலிச்செய்திகளின் பரவல், ஏ.எல். (AI) தொழில்நுட்பங்களின் எதிர்மறையான விளைவுகள், தன்னிச்சையான இடம்பெயர்வு, இணையப் பாதுகாப்பற்ற தன்மை, சமூக துருவமயப்படுத்துதல் மற்றும் சூழல் மாசுபாடு என்பன தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

### தேர்தலும் போலிச்செய்திகளும்

இவற்றில் போலிச்செய்தி மற்றும் தவறான தகவல்கள் அதிகமாகப் பரவும் நாடாக இந்தியா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து இடர்களிலும் தவறான தகவல் மற்றும் போலிச்செய்திகளின் ஆக்கிரமிப்பானது, தொற்று நோய்கள், சட்டவிரோத பொருளாதார நடவடிக்கைகள், சமத்துவமின்மை மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவற்றை விடவும் முதன்மையாகக் கருதப்படும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக நிபுணர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. சுமார் 1.4 பில்லியன் மக்கள் வசிக்கும் இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மே மாதம் வரை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டு தேர்தலின் போதும் போலிச் செய்திகள், தவறான தகவல் பகிர்வுகள் என்பன மிகப்பெரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டும் நிபுணர்கள் இம்முறையும் தேர்தல் காலங்களில் மிக மோசமான வன்முறைகள் வரையில் இதன் தாக்கங்கள் இருக்கும் எனத் தெரிவிக்கின்றனர்.

அதேபோல், 'அங்கர் சேன்ஞ் எலக்சன் சைக்கிள் ட்ரக்கர்' (Anchor Change Election Cycle Tracker) மற்றும் 'ஸ்ரரிஸ்ரா' (Statista) இன் கூடுதல் ஆய்வறிக்கையின் படி, 2024ஆம் ஆண்டில் உலகளவில் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் தேசியத் தேர்தல்களை மக்கள் எதிர்கொள்கின்றனர். சுமார் 2 பில்லியன் வாக்காளர்கள் அண்ணளவாக உலக மக்கள்தொகையில் கால் பகுதியினர் இந்த ஆண்டு வாக்களிக்கவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய 2024ஆம் ஆண்டானது வரலாற்றில் மிகப்பெரிய தேர்தல் ஆண்டு என்று அழைக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளதுடன், முக்கியமாக அமெரிக்கா, மெக்சிக்கோ, இந்தியா மற்றும் இந்தோனேசியா போன்ற அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் இந்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ளது. ஆகவே இந்த நாடுகளில் போலிச் செய்தி மற்றும் தவறான தகவல் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை மக்களும் இந்த ஆண்டில் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளனர். இவ்வாறான பின்னணியில் போலிச்செய்திகளின் பரவல் மற்றும் தவறான செய்திப் பகிர்வு என்பன இலங்கைக்கும் அச்சுறுத்தலாகவே காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உலகமயமாகின்ற போலிச் செய்திகள்

மேலும் எல் சல்வடோர், சவூதி அரேபியா, பாகிஸ்தான், ருமேனியா, அயர்லாந்து, செக்கோஸ்லோவாக்கியா, அமெரிக்கா, சியாரா லியோன், பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் தவறான தகவல் மற்றும் போலிச் செய்திகளின் தாக்கங்களின் அதிக ஆபத்தை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு எதிர்கொள்ளும் 34 அபாயங்களில் மிக மோசமான ஆபத்துகளில் முதன்மையாக இந்தப் போலிச் செய்தியின் பரவல் இருக்கும் எனவும், நீண்டகால அச்சுறுத்தல்களில் முதல் நான்கு அல்லது ஆறு இடங்களுக்குள் போலிச் செய்தியின் தாக்கம் இருக்கும் எனவும் உலகப் பொருளாதார மன்றம் சுட்டிக்காட்டுகின்றது.

உலகப் பொருளாதார மன்ற ஆய்வாளர்கள் கருத்துப்படி, 'இந்தத் தேர்தல் செயல்முறைகளில் தவறான தகவல்களும் போலிச் செய்திகளும் அதிகளவில் இருப்பதால், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் உண்மையான மற்றும் உணரப்பட்ட சட்டபூர்வமான தன்மையை தீவிரமாக சீர்குலைக்கும், அரசியல் அமைதியின்மை, வன்முறை மற்றும் பயங்கரவாதம் மற்றும் ஜனநாயக செயல்முறைகளின் நீண்டகால பின்னடைவு ஆகியவற்றை அபாயப்படுத்தலாம்.' எனத் தெரிவிக்கின்றனர்.

தேர்தல்களுக்கு அப்பால், பொதுச் சுகாதாரம் முதல் சமூக நீதி வரையிலான பிரச்சினைகள் குறித்த பொது உரையாடலில் இந்த மோசமான தன்மை ஊடுருவி, யதார்த்தத்தின் உணர்வுகள் மேலும் துருவப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும், உண்மை குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுவதால், உள்நாட்டு பிரசாரம் மற்றும் தணிக்கையின் ஆபத்தும் அதிகரிக்கும். தவறான மற்றும் போலியான தகவல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, அரசாங்கங்கள் 'உண்மை' என்று தீர்மானிப்பதன் அடிப்படையில் தகவல்களைக் கட்டுப்படுத்த அதிக அதிகாரம் அளிக்கப்படலாம்.

### தகவல் முடக்கமும் இலங்கைத் தீவும்

இணையம், பத்திரிகை மற்றும் பரந்த தகவல் ஆதாரங்களுக்கான அணுகல் தொடர்பான சுதந்திரங்கள், ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ளதால், பரந்த அளவிலான நாடுகளில் தகவல் முடக்கம் என்ற கோட்பாடு மேலோங்குவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையை எடுத்துக்கொண்டால் தற்போது அரசாங்கம் கொண்டுவந்துள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டத்தின் பாய்ச்சலானது ஜனநாயக வரம்புகளை மீறிச்செல்வதுடன் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் ஆகியவற்றையும் மிக மோசமாக பாதிக்கும் என நிபுணர்களால் எச்சரிக்கப்பட்டு வருகின்றது. எனினும் போலிச்செய்திகள், தவறான தகவல் பகிர்வின் விளைவுகளும் இதில் தாக்கம் செலுத்தி வருகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இலங்கையில் போலிச்செய்திகளின் உண்மைத்தன்மையை கண்டறிவதிலும், தவறான தகவல் பகிர்வுகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதிலும், தரவு சரிபார்த்தல் போன்ற விடயங்களில் பணியாற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் உண்மையைக் கண்டறியும் முன்னெடுப்பு தொடர்ச்சியாக செயற்பட்டு வருவதுடன், இலங்கையில் வேறு சில நிறுவனங்களும் இதனை முன்னெடுத்து வருகின்றன.



# இந்தியத் தூதுவர் தமிழ்த்தரப்புடன் உரையாடியது

# ஏன்? எதற்காக?

அ.நிக்ஸன்

சிங்கள அரசியல் கட்சிகளையும் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சந்தித்து வரும் இந்தியா, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனக்குரியநலன்களை இலங்கையிடம் இருந்து பெற்று வரும் நிலையில் அல்லது அதற்கான பேரம் பேசல்களை நடத்திக் கொண்டு இலங்கைத்தீவை இந்தியாவின் மற்றொரு மாநிலமாகக் கருதுகின்றதா என்ற கேள்விகள் எழுகின்றன.

ஏற்கனவே இந்தக்கேள்விகள் பலரிடமும் உண்டு. ஆனாலும், மிகச் சமீபகாலமாக அக் கேள்விகளை நிரூபிக்கும் வகையில் இலங்கைத்தீவு மீதுதான் இந்தியாவின் சுயநல அக்கறையைக் காண முடிகின்றது.

ஜே.வி.பி. தலைவர் அனுரகுமாரதிஸாநாயக்காவைப் புதுடில்லி அழைத்துச் சந்தித்தது முதல் தமிழ்த்தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளை கொழும்பில் உள்ள புதிய தூதுவர் யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தது வரையும் இந்தியாவின் அக்கறையைக் காணலாம்.

இந்த அக்கறை என்பது ஈழத்தமிழ் மக்கள் சார்ந்தோ அல்லது சிங்கள அரசியல் கட்சிகளின் நலன் சார்ந்தோ இல்லை. ஒட்டுமொத்த இலங்கைத்தீவின் நலன் என்பதன் ஊடாக இந்தியா என்ற ஒரு பெரிய சக்தி, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனக்குரிய பாதுகாப்புத் தளத்தைக் கட்டமைக்கிறது என்றால் அதில் மாற்றுக் கருத்தில்லை. ரணில், மஹிந்த, சஜித், மைத்திரிபால சிறிசேன ஆகிய மூத்த சிங்கள அரசியல் தலைவர்கள் தலைமையிலான பிரதான அரசியல் கட்சிகள் படிப்படியாகச் சிதறுண்டு வரும் நிலையில். ஜே.வி.பி. புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டுத் தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதைவடைந்து வரும் நிலையில் - குறிப்பாகத் தமிழரசுக் கட்சி உடைந்துபோகவுள்ள சூழலில் - தமிழ்தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சந்தித்துப் பேசியிருக்கிறார்.

பதின்மூன்றுதான் தீர்வு என்று இந்தியா ஈழத் தமிழர்களின் நெற்றியில் எழுதியுள்ளது. ஆனால் அதனை ஏற்க முடியாது என்று தமிழ்த்தரப்பு நிராகரித்து விட்ட பின்னணியிலும் அதனை நடைமுறைப் படுத்தவே கூடாது என்ற பிடிவாதத்துடன் சிங்கள அரசியல் தலைவர்கள் துணிந்து குரல் எழுப்பும் நிலையிலும், தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான சந்திப்பு எதற்காக?

இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் மாத்திரமே கொடுக்க முடியும் என்று கொழும்பில் கூறிய பின்னர் யாழ். சந்திப்பு ஏன்?



புதிய தூதுவர் மரியாதையின் நிமித்தம் சந்திக்கிறார் என்று சில தமிழ் உறுப்பினர்கள் கற்பிதம் செய்யலாம்.

ஆனால் கடந்த ஜனவரி மாதம் புதிய தூதுவர் தமிழ்த்தேசியக் கட்சிகளைக் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் சம்பிரதாயபூர்வமாகச் சந்தித்தபோது, "தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த மட்டுமே முடியும்" என்று கூறியிருக்கிறார். தூதுவர் அவ்வாறு கூறியபோது தமிழ்த்தேசியக் கட்சி உறுப்பினர்கள் கடுமையான கண்டனத்தை உடனடியாக வெளிப்படுத்தியிருக்க வேண்டும். மாறாக அமைதியாக வாயை மூடிக் கொண்டிருந்திருக்கின்றனர்.

1983 இல் இருந்து ஈழத்தமிழர் விவகாரத்தில் தலையிட்ட இந்தியா, 2009 க்குப் பின்னரான சூழலில் தமக்குரிய புவிசார் அரசியல் நலன்களையும் வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தில் பெற்றுள்ள நிலையில், அரசியல் தீர்வுக்கான அழுத்தங்களை நேர்மையாக வழங்கவில்லை.

மாறாகப் பதின்மூன்றை ஆரம்பப் புள்ளியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று மாத்திரமே இந்தியா தமிழர்களை வலியுறுத்தி வருகிறது. வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கொழும்பில் தமிழ்த்தேசியக் கட்சிகளைச் சந்தித்த போது உங்களிடம் ஒற்றுமை இல்லை என்ற கிண்டல் தொனியில் கூறிய கதைகளும் உண்டு.

இந்தப் பின்புலத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பை புதிய தூதுவருடனான சம்பிரதாயபூர்வ சந்திப்பு என்று கூறிவிட முடியாது. ஏனெனில் புதிய தூதுவர் அங்கு முன்வைத்த கருத்துகள் அத்தனையும் இந்திய - இலங்கை உறவு குறிப்பாக இந்தியா மேற்கொள்ளவுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியதாகவே இருந்தன. அப்படித்தான் சம்பிரதாயபூர்வ சந்திப்பு என்று சொன்னாலும் இலங்கைத்தீவின் பிரதான பிரச்சினை எது? ஈழத்தமிழர் விவகாரம். ஆனால் அந்த விவகாரத்தை இந்தியா 2009 க்குப் பின்னரான சூழலில் பத்தோடு பதினொன்றாகவே கருதுகின்றது என்பதையே இந்தியத் தூதுவர்களின் கருத்துகள் வெளிப்படுத்துகின்றன.

2024 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு இலங்கைத்தீவில் என்ன தேவையென்றால், தங்களுக்கு ஏற்ற ஒரேயொரு ஜனாதிபதியும் பெரும்பான்மைப்பலம் உள்ள அரசாங்கமும் மாத்திரமே.

2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இருந்து இலங்கை அரசு என்ற கட்டமைப்பைத் திருத்தம் செய்வதுதான் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு வேலையாக இருந்ததே தவிர, ஈழத்தமிழர் விவகாரம் பற்றியதல்ல.

2012 இல் ஜெனிவா மனித உரிமைச்சபையில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானமும், 2013 இல் செய்யப்பட்ட சிங்கப்பூர் பிரகடனமும், 2023 இல் கையளிக்கப்பட்ட இமாலயப் பிரகடனமும் இலங்கையின் ஒற்றையாட்சியை வலியுறுத்தியதாகவே இருந்தன.

பௌத்த - சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தினால் தமக்குரிய அரசியல் பொருளாதார நலன்களை சிங்கள அரசியல் தலைவர்களிடம் இருந்து பெறலாம் என்ற அணுகுமுறை அமெரிக்க - இந்திய அரசுகளினால் கடந்த சில ஆண்டுகளாகக் கையாளப்பட்டு வருகின்றன.

அதனாலேயே ஈழத்தமிழர் விவகாரத்தை ஒப்பாசாரத்துக்காக இந்த நாடுகள் கையில் எடுக்கின்றன. ஏனெனில் ஈழத்தமிழர் விவகாரத்தை வலியுறுத்தினால் பௌத்த - சிங்கள மக்கள் கோபமடைவார்கள் என்ற ஓர் அச்சம் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு இல்லாமலில்லை.

சிங்கள மக்களைக் கோபப்படுத்தக்கூடாது என்று 2015 இல் மைத்திரி - ரணில் ஆட்சியின்போது சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறியமைகூட அமெரிக்க - இந்திய அரசுகளின் கருத்து வெளிப்பாடுதான்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள பல அதிகாரங்கள் அவ்வப்போது கொழும்பு நிர்வாகத்தினால் தன்னிச்சையாக அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீளப் பெறப்பட்டது போன்று, மாகாணங்களுக்குரிய காணி பொலிஸ் அதிகாரங்களை மீளப்பெறக்கூடிய முறையில் கடந்த வாரம் வர்த்தமானியில் வெளியாகியுள்ளது. காணி பொலிஸ் அதிகாரங்களை மீளப் பெறவேண்டும். என வலியுறுத்தி உதய கம்மன்பில கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தனிநபர் பிரேரணைதான் கடந்த வாரம் வர்த்தமானியாக வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் இந்தியத் தூதுவர் தமிழ்த்தேசியக் கட்சிகளைச் சந்திப்பது, அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிப் பேசுவது என்பதெல்லாமே இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை ஈழத்தமிழர் ஏற்கவேண்டும் என்பதன் வெளிப்பாடுகள்தான். ஆனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் குறிப்பாக தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் மற்றும் விக்னேஸ்வரன் தலைமையிலான அணி இதனைப் பகிரங்கமாகப் பேச முன்வருவதில்லை.

வெள்ளிக்கிழமைச் சந்திப்பில்கூட இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்புப் பற்றியும் ,வடக்கு- கிழக்கில் சீனாவின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுமதிக்காது என்றும் பேசியிருக்கின்றனர்.

கொழும்போடும் சிங்கள அரசியல் தலைவர்களோடும் மாத்திரம் பேரம் பேசும் இந்தியா, அதுவும் பௌத்த சிங்கள மக்களின் நலனுக்காகச் சில விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செயற்படும் இந்தியா, ஈழத்தமிழர்களை மாத்திரம் ஏன் ஓரக் கண்ணால் பார்க்கின்றது என்பதைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் புரிந்துகொள்ள மறுக்கின்றன.

இந்தியத் தூதுவர் சந்திக்க அழைத்ததும் ஏன் இவர்கள் ஓடிச் செல்கிறார்கள் என்று ஒரு சாதாரண பொதுமகன் வெட்கப்பட்டுக் கேட்கும் அளவுக்குத் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஏன் சிந்திப்பதில்லை?

ஜே.வி.பி. தலைவர் எதிர்வரும் நாள்களில் கனடாவுக்குப் பயணம் செய்யவுள்ளார். அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ள நிலையில் கனடா பயணத்துக்கு அடுத்ததாக சீனாவுக்கும் அவர் செல்லவுள்ளார். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின்போது நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க, இந்திய அரசுகள் மாத்திரமல்ல சீனா, ரஷ்யா போன்ற நாடுகளோடும் இலங்கை சமாந்தரமான உறவுகளைப் பேணும் என்று விளக்கமளித்திருந்தார். ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கடந்த வாரம் கருத்து வெளியிட்டிருந்த ஜே.வி.பி. உறுப்பினர் விஜத ஹேரத், 2015 இல் ரணில் கூறிய அதே கருத்தையே முன்வைத்திருந்தார். அதாவது அமெரிக்க - இந்திய அரசுகள் மாத்திரமல்ல சீனாவும் இலங்கைக்குத் தேவை என்று விபரித்திருந்தார். ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாத்திரம் இந்தியா போதுமானது என்ற மனநிலை நீட்சியடைகிறது.

பல சந்தர்ப்பங்களில் இலங்கை இராஜதந்திரம், இந்திய இராஜதந்திரத்தின் முகத்தில் கரிபூசிய பின்னரும்கூட இலங்கையிடம் இந்தியா பணிந்துபோயிருக்கிறது. அதே நேரம் ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கைத்தீவு மக்களின் ஒட்டுமொத்த ஜனநாயகப் பாதுகாப்புப் பிரச்சினையாகவும், மனித உரிமை மீறல் விவகாரங்களாகவும் மாத்திரம் மடைமாற்றியுள்ள சூழலில், இந்தியா மீது தமிழ்த்தரப்பு நம்பிக்கை வைத்திருப்பது நகைப்புக்கிடமானது. சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அமெரிக்கா மீது நம்பிக்கை வைத்திருப்பதும் வேடிக்கையானது. தற்போது குழம்பியுள்ள புவிசார் அரசியல் பொருளாதார சூழலில் சீனா உட்பட உலகின் எந்த ஒரு நாட்டோடும் தமிழ்த்தரப்பு பேச வேண்டும். ஆனால் அதற்குரிய தற்துணிவும் சுயமரியாதையும் தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக கட்சிப் பதவிப் போட்டிகளும் , நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதும் , தேர்தல் வியூகங்களும் மாத்திரமே தற்போது விஞ்சியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்





தே.மகீஷனன்
தரம் - 11
யா/சாவகச்சேரி
இந்து கல்லூரி



J.L.நிஷாரா
தரம் - 6
ஏஞ்சல் இன்ரர்நஷனல்
பாடசாலை.



P.ஹேரசாஜினி
தரம் - 3C
யா/சுண்டுக்குழி மகளிர்
கல்லூரி



அகப்பிரியன்
தரம் - 7
முல்லைத்தீவு
மத்திய கல்லூரி



வ.ஜானுஷா
தரம் - 04
யா/ நீர்வேலி சி.சி.த.க.
பாடசாலை



ஜெ.வியாசகி
தரம் - 4
கைலாசநாத வேதசிவாகம
அறநெறி பாடசாலை




ல.பவிஷனா
தரம் - 2
யா/புனித ஜோன்
பொஸ்கோ

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

மாணவர்களே!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555





# குரங்கும் முதலையும்



ஒரு பெரிய ஏரியில் நிறைய முதலைகள் இருந்தன. அந்த ஏரிக்கரையில் ஒரு பெரிய மரத்தில் குரங்கு ஒன்று வசித்து வந்தது. ஒரு ஆண் முதலையும், குரங்கும் மிகுந்த நண்பர்களாயின. அம்முதலை தினமும் அம்மரத்தடிக்கு வந்து குரங்குடன் உரையாடிக் கொண்டிருந்து விட்டுச் செல்லும். இவ்வாறு பல நாட்கள் நடந்து வந்தது. அம் முதலை தன் மனைவியுடன் அவ்வேரியின் நடுவில் ஒரு சிறு தீவில் வசித்து வந்தது. ஒரு நாள் ஆண் முதலையுடன் பெண்முதலையும் மரத்தடிக்கு வந்தது. அங்கு குரங்குடன் ஆண்முதலை பேசுவதையும் அவர்களது நெருங்கிய சினேகிதத்தைக் கண்டது.

அப்பெண் முதலை குரங்கின் ஈரலை உண்ண வெகுநாட்களாக ஆவலாக இருந்தது. முதலை இரண்டும் தமது இருப்பிடம் திரும்பின.

இதைக் கேட்ட குரங்கு உடனே முதலையிடம் தந்திரமாக

"நண்பரே! இதைத் தாங்கள் மரத்தடியிலேயே கூறியிருக்கக் கூடாதா? எனது ஈரலை அம்மரத்தில் உலர்த்தியிருக்கின்றேன். தாங்கள் அங்கு கூறியிருந்தால் அதை எடுத்து வந்திருக்கலாம்" என்றது.

"குரங்கின் வார்த்தைகளை நம்பிய முதலை உடனே குரங்குடன் திரும்ப மரத்தடிக்கு வந்தது. அங்கு வந்து சேர்ந்ததும் குரங்கு தாவி மரத்தில் ஏறிக் கொண்டது உடனே முதலையிடம் தாங்கள் இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தங்களுடன் வந்து உயிர் துறக்க நான் விரும்பவில்லை, என்றது. இது கேட்ட முதலை தனது முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.



# கிளி

பச்சை கிளி பேசுது
பறந்து செல்ல அழைக்குது

சிவந்த நிறச் சொண்டினால்
சின்னப் பழம் தின்னுது
அவனியெல்லாம் தனதென்று
ஆடிப்பாடிச் சொல்லுது

சிறகடிக்க நினைக்குது
சீறும் பூனை பாக்குது
இறங்கி ஓட நினைக்குது
இரும்புக்கூடு தடுக்குது

சிந்தை நொந்து கலங்குது
சிறுமை கண்டு சிரிக்குது
விந்தையான மனிதனின்
விருப்பம் கண்டு ஒதுங்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமணி

## ஒப்பில்லாமணி



○ கோகுலராகவன்

பேராசிரியர் த.கலாமணி காலமாகிவிட்டார். யாழ்ப்பாணத்தின் கல்வி அடையாளங்களில் அவரும் ஒருவர். எனக்கும் அவருக்குமான தொடர்பு என்னவென்றால், ஒரு வருடம் அவரிடம் மாணவனாக படித்திருக்கிறேன். இந்த ஒரு வருடத்தில் நான் அவரிடம் என்னை எழுத்தாளன் என்று சொன்னதில்லை. அவரும் கேட்டதில்லை.

நகுலன் கவிதை ஒன்று இவ்வாறு வரும்.
"என்ன பெயர்? " என்றேன்
"இராமச்சந்திரன்" என்றார்.
எந்த இராமச்சந்திரன் என்று
நானும் கேட்கவில்லை.
அவரும் சொல்லவில்லை

இந்தக் கவிதை கலாமணி சேரின் மரணச் செய்தி கேட்டதும் ஞாபகம் வந்தது.







இந்த ஒரு வருடப் படிப்பு முடிவில் இறுதியாக அவர் பட்டச்சான்றிதழில் கையொப்பம் இட்டுத் தரும் போது பெயரை பார்த்துவிட்டு நிமிர்ந்து பார்த்து
"எழுத்தாளர் கோகுலராகவனா? "
"ஓம் சேர்"
"ஏன் இவ்வளவு நாளும் சொல்லவில்லை " ?
"தோன்றவில்லை " என்றேன்.
சிரித்தார்.
"சலுகைக்காக அறிமுகம் செய்வதாக வந்து விடும்" என்றேன்.
"அதுவும் சரிதான்"
"ஜீவநதிக்கு எழுதும்"
"ஓம் சேர் இரண்டு கவிதை வந்திருக்கு "
"தெரியும்".

இவை தவிர அவரிடம் எதுவும் நான் பேசியதில்லை.

கலைஞனை, எழுத்தாளனை தூர இருந்து இரசித்துப் பார்க்கவேண்டும். இதுதான் எனக்கு பிடித்த விடயங்களில் ஒன்று. இது சமரசம் அல்ல. எழுத்தாளனின், கலைஞனின் ஊடகம் அவனது படைப்பு, ஆற்றுகை இவை தாண்டி வேறெதுவும் இருக்கப் போவதில்லை.

அவரில் எனக்கு பிடித்த விடயம் அவர் அற்புதமான கூத்தாடி. காத்தவராயன் கூத்தை விரும்பி ஆடுவார். இதில் எனது ஆச்சரியம் யாதெனில் தனது கல்வி, பதவி அடையாளங்களில் இருந்து இறங்கி வந்திருக்கின்ற அவரது மனோபாவம்.

கூத்தை இரசித்து விட்டு, கூத்தாடிகளை எள்ளி நகையாடும் மனப்பாங்கு கொண்ட சமூகத்திலே கூத்து மூலம் தனக்கென் ஒரு அடையாளத்தை உருவாக்க அவர் தயங்கியுதில்லை. இதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார். அவர் பிரபல்யமான "காத்தான் "நடிகர் அதன் பக்தர்.

அவரது உரையாடும் பாணியை நான் நேசித்திருக்கிறேன். எளிமையான அடையாளம். கிராமத்து வெள்ளாந்தி மனிதனுக்குரிய பேச்சுமொழியை அவர் தன்னகப்படுத்தி வைத்திருந்தார். நான் ஒரு தடவை 'பிரச்சனை' என்று எழுத அது 'பிரச்சினை' என்றுவரும் எனச் சரியாக சொல்லி தந்தவர். கணிதப்பட்டதாரி தமிழில் சாதித்தது வியப்பானது என்பதைத் தாண்டி அதை அழகாகக் கையாண்டார் என்பதே உவப்பானது.

2000 ஆம் ஆண்டில் சரிநிகர் பத்திரிகையில் முதன் முதலில் அவரது சிறுகதையை வாசித்த போது, 'த.கலாமணி' புதிய பெயர். சரிநிகர் படைப்பாளிகள் காத்திரமான படைப்பாளிகள் என்ற எண்ணம், கருத்து மேலோங்கி இருந்த காலகட்டமது. விரிவுரையாளர் கமலநாதன் சேர் இயக்கிய "ஒப்பில்லாமணி" குறுந்திரைப்படத்தில் நடித்து தன்னை திரைப்பட நடிகனாகவும் ஆதாரப்படுத்தியவர். இது அவரது பன்முக ஆளுமையை வெளிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பம். இவையெல்லாம் தாண்டி "ஜீவநதி"சஞ்சிகையை 2000ஆம் ஆண்டளவில், அவர் தொடக்கியபோது என்ன நம்பிக்கையில் தொடக்கினார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இன்று இலங்கை தமிழ் இலக்கிய பரப்பில் "ஜீவநதி" பெரு விருட்சமாக அகன்று நிற்கின்றது.

அவர் விட்டுச்சென்ற இன்னொரு அடையாளம். அவரது பெருங்கனவு. அது பதிப்பகமாகவும் அவரது மகன் பரணி மூலம் தொடர்கிறது என்பது ஒரு வரலாற்றுச் சாதனை. ஒப்பில்லாமணியாக வாழ்ந்த கலாமணிக்கு என் இதயபூர்வமான அஞ்சலிகள்.

---

# ஊர்ப்புதினம்



பாகம் 2

○ இராகவன்

அந்தப் பிள்ளை வெளியில ஓடிப்போய் நடந்த சங்கதியெல்லாம் நவம் மாஸ்ரரிட்டச் சொல்லியிருக்குது. வில்லிலயிருந்து புறப்பட்ட அம்புக்கணக்கா நவம் மாஸ்ரர் பாய்ஞ்சுவந்தார். அவரக் கண்டோண்ண சுத்தி நிண்ட பொடியள் எல்லாம் கழண்டிட்டாங்கள். நான்தான் அம்பிட்டன். பிரச்சினையென்னவெண்டால் அந்தப் பிள்ளை எங்கட பெயர்களைச் சொல்லாமல் விசயத்தை மட்டும் சொல்லியிருக்குது. அதால அவர் நான்தான் பிரச்சினையான ஆள் எண்டு நினைக்கேல்ல. வேற யாரோ பொடியள்தான் வந்து முசுப்பாத்தி பண்ணியிருக்கிறாங்கள், நாலுக்காறு போடலாமெண்டுதான் பாய்ஞ்சு வந்திருக்கிறார்.

27


நவம் மாஸ்ரர்

என்னைக் கண்டதும் 'சடுண் பிறேக்'போட்டார்.

"டேய்! கேசவன்ர தம்பி (நவம் மாஸ்ரர் என்னை எப்பவும் அப்படித்தான் கூப்பிடுவார்) வெளில போடா" எண்டார். வேற யாரும் அதில நிண்டிருந்தா நாலுக்காறு போட்டிருப்பார். தப்பினன் பிழைச்சன் எண்டு நான் எங்கட பகுதிக்கு வந்து சேர்ந்தன். அந்தக் கண்காட்சி முடியும் வரைக்கும் நான் அந்தப் பக்கம் தலைவைச்சும் படுக்கேல்ல.

நான் ஆறாம் வகுப்பு அல்லது ஏழாம் வகுப்புப் படிக்கேக்குள்ளை எண்டு நினைக்கிறன். அப்ப மூத்தண்ணா நவம் மாஸ்ரரின் 'பியூஸி' ரியூசன் உட்பட கனரியூசன்களில ஏ.எல். லுக்கு கொமர்ஸ் படிப்பிச்சுக் கொண்டிருந்தவன். வடமராட்சிக்குள்ள மோட்டச்சைக்கிள் வைச்சிருந்த விரல்விட்டு எண்ணக்கூடிய ஆக்களில எங்கட மூத்தண்ணனும் ஒருத்தன். அவன் ரியூசன் எல்லாம் முடிஞ்சு வீட்டை திரும்ப இரவு ஏழெட்டு மணியாகும். மோட்டச்சைக்கிள் சத்தம் றோட்டில கேட்டால் நான்தான் போய் வீட்டுக்கேற்றைத் திறந்து விடுறது. அண்டைக்கும் அப்பிடித்தான் ஒரு மோட்டச் சைக்கிள் வாற சத்தம் றோட்டில கேட்டுது. நான் மூத்தண்ணன் தான் வாறானாக்கும் எண்டுட்டுப் போய்க் கேற்றைத் திறந்தன். ஓராள் மோட்டச் சைக்கிளோட உள்ளுக்கு வந்திச்சுது. மூத்தண்ணன்ர மோட்டச் சைக்கிள் 'சாணிப்பச்சை' கலருள்ள ' சீ-நைன்ரி '. ஆனால் உள்ளுக்கு வந்தது சில்வர் 'பிளென் ஹொண்டா'. அந்தாள் வேட்டியோட இறங்கேக்குள்ளயே எனக்கு ஆள் ஆரெண்டு விளங்கிட்டுது. உங்களுக்கும் விளங்கியிருக்கும். வேறை ஆர் எங்கடையாள் நவம் மாஸ்ரர்தான். அவர் வந்தநேரம் மூத்தண்ணன் வீட்டிலயில்லை. அப்பாதான் விறாந்தையில

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கே.வி.தவராசா

# வர்த்தகர் ராஜன் கைதும் விடுதலையும்






(1998-1999)

சமாதான நீதிவானும், முன்னாள் தொழில் அமைச்சரின் பிரத்தியேகக் காரியதரிசியும் வெளிநாட்டு நாணயமாற்று வர்த்தகத்துடன் கொழும்பிலிருந்து தூத்துக்குடி காங்கேசன் துறை ஆகிய துறைமுகங்கள் ஊடாக அரச அனுமதி பெற்று கடல் மார்க்கமாக ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் புரிந்து வந்த பிரபல தமிழ் வர்த்தகருமான சதாசிவம் வின்சேந்திரராஜன் என்கிற ராஜன் 1998ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி கொழும்பு புலனாய்வுத்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்ட சதாசிவம் வின்சேந்திரராஜன், பாதுகாப்பு அமைச்சரினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவையடுத்து, குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிஸாரினால் 4 ஆம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் புண்ணியா டி சில்வாவின் நேரடிக் கண்காணிப்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வர்த்தகர் கைது செய்யப்படுவதற்கு சிலமாதங்களுக்கு முன்னர் 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் 8 ஆம் திகதி வெளிநாடு புறப்படவிருந்த மூன்று பயணிகள் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து புலனாய்வுத்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மூவரும், வெளிநாட்டு நாணய மோசடி செய்யும் நோக்கத்தில்,பிழையான தகவல்களை வழங்கி சட்டரீதியற்ற முறையில் சம்பத் வங்கியின் மூலம் பெறப்பட்ட 20ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டுப் பயணக் காசோலைகளை தமது உடைமையில் வைத்திருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு பயங்கரவாதச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதி இந்த மூன்று சந்தேகநபர்களும் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பொழுது பொலிஸாரின் முதல் அறிக்கையில் 'சந்தேகநபர்களான மூன்று பயணிகளின் உடைமையிலிருந்தும் தலா 20 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியுடைய பயணக் காசோலைகள் கைப்பற்றப்பட்டதாகவும், இந்தப் பணத்தை சட்டரீதியற்ற முறையில் உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்ல எத்தனிக்கையிலேயே கைது செய்யப்பட்டதாகவும் 'தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்தோடு சட்டரீதியற்ற முறையில் கடத்த முயற்சித்த இந்தப் பயணக் காசோலைகள் புலிகளுக்கு வழங்கப்படுகின்றனவா? புலிகள் ஆயுதம் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய இந்தப் பணம் உபயோகிக்கப்படுகின்றதா? என்பன பற்றிய விசாரணை நடைபெறுவதாகவும், ஆகவே இந்த மூன்று சந்தேகநபர்களையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 7 (2)ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றக்காவலில் வைக்கும்படி பொலிஸார் வேண்டிக் கொண்டனர். இதனையடுத்து, தடுப்புக் காவலிருந்த மூன்று சந்தேகநபர்களும் நீதிமன்ற உத்தரவையடுத்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டனர்.

> **சட்டரீதியற்ற முறையில் கடத்திச்செல்ல முற்பட்ட இந்தப் பயணக் காசோலைகள் மூலம் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கு உதவினர் என்ற சந்தேகம்**

குற்றப்புலனாய்வு பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை பல முறைகளில் நடத்திய பின்னர் 1998ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி மேலதிக விசாரணை அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தனர். அதில், தாங்கள் மேற்கொண்ட விசாரணையில் இந்த மூன்று சந்தேகநபர்களுக்கும் புலிகளுடன் தொடர்பு உண்டு என எந்தச் சான்றும் இதுவரையில் கிடைக்கவில்லையெனவும் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தில் மூன்று சந்தேகநபர்கள் சார்பிலும் நான் முன்னிலையாகியிருந்தேன், என்னால் முன் வைக்கப்பட்ட சட்டவாதத்தின்படி முக்கியமான இரண்டு காரணங்களின் அடிப்படையிலேயே இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தேன்.

1. மூன்று சந்தேகநபரும் தலா 20ஆயிரம் அமெரிக்க டொலரை தன்னகத்தே தனியுடைமையில் வைத்திருந்தனர்.
2. சட்டரீதியற்ற முறையில் கடத்திச்செல்ல முற்பட்ட இந்தப் பயணக் காசோலைகள் மூலம் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கு உதவினர் என்ற சந்தேகம்

இந்த இரு காரணங்களின் அடிப்படையில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக முதல் அறிக்கையில் பொலிஸார் தெரிவித்திருந்தனர். ஆனால் பின்னர் அவர்களுக்கும் புலிகளுக்கும் சம்பந்தமிருப்பதாக விசாரணையில் எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லையெனவும் பொலிஸார் தம் இயலாமையை ஒப்புக்கொண்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் நீதிமன்றில் என்னால் முன்வைக்கப்பட்ட வாதத்தில் சில விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

1. இலங்கைப் பிரஜை ஒருவர் ஆகக் குறைந்த தொகையாக 20ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பயணக் காசோலைகளை வெளிநாடு செல்கையில் உடைமையில் வைத்திருக்க மத்திய வங்கி அனுமதியளித்து உள்ளது. அந்தத் தொகையை அரச, தனியார் வங்கிகளில் பெற்றுக்கொள்ளமுடியும்.
2. 20ஆயிரம் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட பயணக் காசோலைகளை வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாயின் மட்டுமே மத்திய வங்கியிடம் அனுமதி பெறவேண்டும்

இந்த இரு விடயங்களும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முதல் அறிக்கையையும் விசாரணையின் பின்னர் பல மேலதிக அறிக்கைகளையும் பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த போதிலும் இறுதிவரை எந்தச் சான்றும் பொலிஸாரினால் முன்வைக்கப்படாத நிலையில் மூன்று சந்தேகநபர்களையும் வழக்கிலிருந்து விடுதலை செய்யும்படி சந்தேகநபர்கள் சார்பில் நீதிமன்றத்தை வேண்டிக்கொள்ளப்பட்டது. ஆனால் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரோ, மூன்று சந்தேகநபர்களினதும் விசாரணை முடிவடையவில்லை என்பதால், சந்தேகநபர்களை விடுதலை செய்வதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர். எனினும் எனது வாதத்தை கவனத்தில் கொண்ட நீதிபதி மூன்று சந்தேகநபர்களையும் தலா 25000 ரூபா சரீரப் பிணையிலும் 25, 000 ரூபா ரொக்கப் பிணையிலும் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி விடுதலை செய்தார். பிரதான நீதிவான் நீதிமன்றத்தினால் மூன்று சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் வர்த்தகர் சதாசிவம் வின்சேந்திரராஜனை கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவித்தல் அனுப்பும்படி குற்றப்புலனாய்வுத்துறை பொலிஸார் நீதிமன்றை வேண்டிக்கொண்டனர். இதனையடுத்து நீதிமன்றம் வின்சேந்திரராஜனை ஆஜராகுமாறு அறிவித்தல் அனுப்பியதையடுத்து அவர் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜரானார்.

> **பயங்கரவாத சட்டத்தின் கீழ், சட்டரீதியற்ற முறையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்டமைக்கு எதிராகச் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் உயர்நீதிமன்றத் தில் அடிப்படை மனித உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.**

### வின்சேந்திரராஜன் கைது


சதாசிவம் வின்சேந்திரராஜனுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி விசாரணை நடைபெறுவதால் வின்சேந்திரராஜன் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வதைத் தடை செய்யும் உத்தரவை வழங்கும்படி குற்றப்புலனாய்வுத்துறைபொலிஸாரினால்நீதிமன்றுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, வின்சேந்திரராஜன் வெளிநாடு செல்வதை நீதிமன்றம் தடைசெய்ததுடன் அந்த உத்தரவுப் பிரதிகள் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த நிலையில் குற்றப்புல னாய்வுத்துறை பொலிஸார் 1998 ஆண்டு டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி வர்த்தகர் சதாசிவம் வின்சேந்திரராஜனை கைது செய்து, தடுப்புக்காவல் கட்டளையின் கீழ் விசாரணைகளை நடத்திய பின்னர் முதல் அறிக்கையை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர். அந்த அறிக்கையில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்ட மூவருக்கும் இந்த வர்த்தகரே தலா 20ஆயிரம் அமெரிக்க டொலரை வழங்கியதாகவும், இந்த வகையில் புலிகள் ஆயுதக் கொள்வனவு செய்வதற்கு சந்தேகநபரான இந்த வர்த்தகர் உதவி புரிவதாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் , ஆகவே சந்தேகநபரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணை செய்ய பாதுகாப்பு அமைச்சரினால் தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவந்ததுடன் தடுப்புக்காவல் உத்தரவின் பிரதி ஒன்றும் நீதிமன்றுக்குப் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

### அடிப்படை மனித உரிமை மீறல் மனுதாக்கல்

பயங்கரவாத சட்டத்தின் கீழ், சட்டரீதியற்ற முறையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் புலனாய்வுத்துறைப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் புண்ணியா டி சில்வா, புலனாய்வுத்தறை பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பாலித பெரேரா, பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு, சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டனர்

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிபாயா
(கலைவரலாறு,
நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# கலாசார 'மொசைக்'

## வட இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டு தமிழ்க்கிறிஸ்தவ கலை மற்றும் கட்டடக்கலை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் நாட்டார்வழக்காற்றியல் துறை ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை, தமிழ்நாடு, இந்திய என்பன இணைந்து நடத்திய "தமிழ் கிறிஸ்தவக்கலை உலகங்கள்" எனும் சர்வதேசக் கருத்தரங்கத்தின் ஒருபகுதியாக சாகர ஜெயசிங்கவினால் எடுத்தாளுகை செய்யப்பட்ட "கலாசார மொசைக்" எனும் காண்பியக்காட்சியானது 29 ஜனவரி 2024 மாலை 3.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டு 30 ஜனவரி 2024 தொடக்கம் 09 பெப்ரவரி 2024 வரையில் காட்சிப்படுத்தப்பட்டது. .

இந்தக்காட்சியின் எடுத்தாளுகையாளரான சாகர ஜெயசிங்க இலங்கையில் கலாசார மரபுரிமை, மிஷனரி இயக்கங்கள், திருச்சபைக்கலை மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றில் முதன்மையாகக் கவனம் செலுத்தும் ஒரு கட்டடக்கலைஞர். அத்துடன் அவர் வடிவமைப்பு ஆய்வாளருமாவார். இலங்கையிலுள்ள பல்வேறு மதக்கட்டடங்கள் மற்றும் பிறவழிபாட்டுக் கலைகளை முறையான கட்டடக்கலைப் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் அவரது நடைமுறைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பல்வேறு காலனித்துவ பாரம்பரிய அம்சங்களை பாதுகாக்க உதவியது. குறிப்பாக கடந்த தசாப்தத்தில், பல புத்தகங்கள், கண்காட்சிகள், மாநாட்டுக்கட்டுரைகள்,பொதுவிரிவுரைகள் மற்றும் பத்திரிகை கட்டுரைகள் மூலம் உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழல்களில் இவர் தனது அறிவை பரப்பியுள்ளார். அவர் நினைவுச்சின்னம் மற்றும் தளங்கள் தொடர்பான சர்வதேச கவுன்சிலின் இலங்கையின் கௌரவ செயலாளராகவும், மதம் மற்றும் சடங்குகள் தொடர்பான ICOMOS சர்வதேச அறிவியல் குழுவின் நிபுணத்துவ உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார். தற்போது அவர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த வடிவமைப்புத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், Fundacao para a ciencin e a tecnologia உதவித்தொகை திட்டத்தின் கீழ் லிப்சன் பல்கலைக்கழகத்தின் யசவளை நிறுவனத்தில் ஆராய்ச்சி உறுப்பினராகவும் உள்ளார்.

இவரது காண்பியக்காட்சியானது வட இலங்கையில் உள்ள ஒரடோரியன் தேவாலயங்களின் மறைந்துவரும் பாரம்பரியங்களை தேடிய ஒரு ஆய்வாக அமைந்திருக்கிறது. இலங்கையில் 30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் 2010 இல் இடம்பெற்ற மீள்குடியேற்றத்தின் பின்னரான வரலாற்று சிறப்பு மிக்க தேவாலயங்களின் மூலம் கவரப்பட்டு இவ்வாய்வினை அவர் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வினைப் பார்வையாளர்களிடம் சேர்ப்பதற்கான பிரதிநிதித்துவமாகத்தான் இக்காண்பியக் காட்சியானது அமைந்தது. இதில் காட்சிப்படுத்தப் பட்ட தேவாலயங்களின் படங்கள் 1687- 1842 வரையான ஒரட்டோரியன் மிஷன் காலப்பகுதியைப் பிரதிபலிக்கின்றன. இக்காலப்பகுதியில் அமைக்கப்பட்ட தேவாலயங்கள் கற்பிட்டி, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அதனை சுற்றியுள்ள தீவுகளிலும் அமைக்கப்பட்டிருந்தன என்பதற்கான ஆதாரங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டு அவற்றினை இந்தப்படங்களின் மூலம் ஆவணப்படுத்தியும் உள்ளார்.

இவ்வகையில் முதலாவது படமாக 'இந்து கத்தோலிக்க சந்திப்பு'என்ற தலைப்புடனான படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை 450 ஆண்டுகளுக்கு மேலாக மூன்று ஐரோப்பிய - கிறிஸ்தவ நாடுகளால் ஆளப்பட்டாலும் வட இலங்கையில் இன்றும் இந்துக்கள் மற்றும் கத்தோலிக்கர்களின் செழுமையான பொருள்சார் பண்பாட்டினுள் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இரண்டாவது காட்சிப்படம் கோவாவின் 'பிராமண அருட்பணியாளர்கள்'. இது கோவாவில் இருந்து வட இலங்கைக்கு ஒரட்டேரிய மிஷனரிகள் வந்தமைக்கான சான்றுகளை முன்வைப்பதாக அமைந்துள்ளது.

1687- 1840 வரையான காலப்பகுதியில் இலங்கையில் காலனித்துவ கிறிஸ்தவத்தின் கலை மற்றும் கட்டடக்கலையை உள்ளூர் மயமாக்கும் செயற்பாட்டின் முன்னோடிகளாக கோவா ஒரட்டேரிய மிஷனரிகள் கருதப்படுகின்றனர். இவர்களே கத்தோலிக்க திருச்சபையை உள்ளூர் மயப்படுத்தியவர்கள். இவர்கள் பிராமண சாதியை அதாவது இந்தியப் பூசாரிகள் மரபினைச் சேர்ந்தவர்கள். இலங்கையின் வடக்குப்பகுதியில் ஒரட்டேரிய மிஷனரியின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டது.

மூன்றாவதாக படத்துக்கான தலைப்பு, 'யாழ். மறைமாவட்டம்'. கோவா ஒரட்டேரிய மிஷனரிகளின் வளர்ச்சியின் உச்சக் கட்டமான 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ் .மறைமாவட்டத்தில் பெருமளவான கத்தோலிக்கர்கள் தனித்துவமான தமிழ்ப் பண்பாட்டு நெறிமுறைகளையும் மொழியையும் பேணியதுடன், இந்துப்பாரம்பரியப் பயில்வுகளாலும் தூண்டப்பட்டவர்காகவும் காணப்பட்டனர்.



அதற்குச் சான்றாக கலை கட்டடக்கலை, நாட்டுப்புறவியல் மற்றும் சடங்குகள் இன்றும் உள்ளன. அடுத்த காண்பியமாக அமைந்தது 'வழிபாட்டு இடங்கள்'. இவை சிறத்தலடைந்தவையாகவும், உள்ளூர்த்தனமானவையாகவும், வெப்ப மண்டலத்துக்குரியவையாகவும் தனித்துவத்தைப் பேணி, ஒரட்டேரியன் மதக்கட்டுமானங்களிலும் அறியப்படாத ஒத்திசைவான கட்டடக்கலை வகையாக அமைக்கப்பட்டிருந்தன. 'தேவாலயக் கட்டடக்கலை மாதிரிகள்' எனும் தலைப்பில் அமைந்த அடுத்த காண்பியத்தில், ஒரட்டேரியப் பாணியில் அமைந்த தேவாலயங்களின் எளிமையான அமைப்பு அதன் இரண்டு வகைகளினதும் அடித்தள வரைபடத்துடன் அமையப் பெற்றிருந்தது. தேவாலயத்தின் உட்புற வடிவமைப்பு என்பதற்கு கீழ் தேவா லயங்களின் உட்புறத்தின் கூறுகள் கலப்புப்பாணியிலமைந்ததாகவும் மரத்தினாலான தூண்கள் மற்றும் பலிபீடம் உள்ளூர்க் கட்டடக்கலையின் நுணுக்கங்களுடன் தொடர்புபட்டவையாகவும் உள்ளதை எடுத்துக்காட்டியது. மரத்தூண்கள் என்ற தலைப்பில் அடுத்த காட்சிப்படத்தில் தூண்களின் தலைப்பகுதியானது இந்துக் கோயில்களில் காணப்படும் தூண்களின் தலைப்பகுதியை ஒத்தவகையில் நான்கு பக்கமும் அலங்காரத்துடன் காணப்பட்டது. அலங்காரப்பலிபீடம் எனும் தலைப்பிலான இரண்டு படங்கள் அதில் முக்கியமானவை. சிங்காசனம் ஆரம்பத்தில் இந்தியக் கைவினைஞர்களால் அலங்கரிக்கப்பட்டு, இந்தோ - போர்த்துக்கேய மாதிரிகளையும் இணைத்து அமைக்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து பிற்பட்ட காலத்தில் உள்ளூர்க் கைவினைஞர்களால் வடிவமைக்கப்பட்டதும் இந்துக்களின் அலங்கார வடிவமான மங்கள தோரணம் எனும் விடயம் உள்ளடக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டதாகவும் பதிவிடப்பட்டிருந்ததுடன். ஒரட்டேரியர்களின் போர்த்துக்கேயத்தின் தொடர்ச்சியாக இருந்த பண்பாட்டு ஆற்றுகையாக நிகழ்த்தப்பட்ட பாஸ்கு பற்றிய தகவல், மனித அளவு பாஸ்கு படிமங்கள் எனும் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

புதிதாக மதம்மாறும் வட இலங்கையர்களுக்கு இலகுவாக மதத்தினை போதிப்பதற்காக ஓவியங்கள் வரையப்பட்டதாக 'சமய ஓவியங்கள்' எனும் தலைப்பின் கீழ் மற்றைய காட்சியானது அமைந்திருந்தது. வழிபாட்டுச் சிலுவைகள் என்பதற்கு கீழ் ஒரடோரியர்களின் தனித்துவமான அடையாளமாக காணப்பட்ட சிலுவை, தேவாலயங்கள் மற்றும் வீதியோரங்களிலும் நாட்டப்பட்டிருந்தமை புலப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் பலவும் போரினால் அழிக்கப்பட்டு விட்டன. வட இலங்கையில் ஒரடோரியன் மிஷனின் வருகை,அதன் படிப்படியான வளர்ச்சி, உள்ளூர் ஊடகங்களின் பாவனை, உள்ளூர்க் கலைஞர்களின் செல்வாக்கும் இந்து மரபுகளின் செல்வாக்கும், இவற்றின் இன்றைய நிலைப்பாடு என்பவற்றினை அறிந்து கொள்வதற்கான புதியதொரு அறிவின் உற்பத்திக்கான காண்பியக் காட்சியாகவும், ஆவணப்படுத்லாகவும் இந்தக்காட்சியானது அமைந்திருந்தது. தமிழர்களின் மரபுரிமை பற்றிய புரிதலை, குறிப்பாக வடமாகாணத்தின் பொருள்சார் பண்பாட்டைப் பதிவு செய்வதில், இந்தக்காட்சியானது தாக்குவன்மையானது. மெல்லமெல்ல எம்மை விட்டுப் பிரியும் பண்பாட்டு எச்சங்களின் எதிர்காலம் பற்றிய கேள்விகளை ஒவ்வொரு பார்வையாளனிடத்திலும் , இந்தக் கண்காட்சி எழுப்பத் தவறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜீவன் ராம்

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம் 3

## வரலாறும் அதன் பயணப்பாடும்



**தமிழரசுக் கட்சியும் தமிழ்த்தேசியமும்**

ஆரம்ப வரலாற்றின் மூலம் ஜி.ஜி.பொன்னம்பலம், சேர்.பொன்.இராமநாதனின் அரசியல் கருத்தியலை ஆரம்பப்புள்ளியாக கொண்டு 50க்கு 50 என்ற சமபல பிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைத்ததையும் அதில் தோல்வி கண்டமையும் அறிந்துகொண்டோம். அதன்படி ஜி.ஜி.பொன்னம்பலத்தால் உருவாக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்பது சேர்.பொன்.இராமநாதனின் கருத்தியலை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்படது என்பது தெளிவாகின்றது.

இப்பொழுது தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்துக்கு அடிப்படைக் கருத்தியலாக அமைந்த கருத்தியலை பற்றி அறிந்து கொள்வோம். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருந்து செல்வநாயகம் உட்பட சில முக்கியமான தலைவர்கள் வெளியேறியமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமை பறிபோனதற்கு ஜி.ஜி. பொன்னம்பலம் பிரதான காரணமாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டையே முதன்மைப்படுத்தியிருந்தனர்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் இருந்த வெளியேறிய செல்வநாயகம் குழுவினர் 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சியை நிறுவினர்.

இந்தக் கட்சியின் முக்கியமான இலக்கு தமிழ் பேசும் மக்களுக்கென சுயாட்சி அரசொன்றை நிறுவுவது எனக் கூறினர். அன்று செல்வநாயகம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையாக முன்வைத்த தமிழ் பேசும் மக்களுக்கென சுயாட்சி அரசை நிறுவல் என்ற சிந்தனை ஜி.ஜி.பொன்னம்பலம் சமபல பிரதிநிதித்துவ சிந்தனையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்பட்டது.

அந்தச் சிந்தனை ஊற்றின் ஆரம்பம் என்பது சேர்.பொன்.அருணாச்சலத்திடம் இருந்து பிறந்தது. அன்று தமிழர் லீக் அமைப்பை உருவாக்கி தமிழரின் அரசியல் தனிவழியில் பயணிப்பதற்கான அடித்தளத்தை இட்ட அருணாச்சலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தமிழ் மக்களின் வாழ்விடமாகவும் தாயகமாகவும் திகழ்ந்துவந்த வடக்கு - கிழக்கை தமிழர் தாயகமாகவும் பிரகடனம் செய்திருந்தார். அந்தத் தாயகக் கோட்பாடு அவரின் இறப்புக்குப் பின்னால் தமிழ்த்தலைமைகளால் கிடப்பில் போட்டுவைத்திருக்கப்பட்டது. செல்வநாயகம் கிடப்பில் இருந்த தாயகக் கோட்பாட்டுக்கு புத்துயிர் அளித்தார் என்பதே வரலாறு எமக்குக் கூறும் உண்மை.

**தோல்வியில் முடிந்த சமஷ்டிக்கான நகர்வு**

தமிழரசுக் கட்சியினர் வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டிக்கான கோரிக்கைகளை முன்வைத்தனர். பல ஒப்பந்தங்களை மேற்கொண்டனர். அத்தனையும் பயனற்றுப் போனது. இந்தக் காலகட்டத்தில் தமிழரசுக் கட்சியினரின் எதிர்ப்பு அரசியல் சிங்கள தேசிய வாதத்தை மேலும் வலுப்படுத்திச் சென்றது என்ற விமர்சனங்களும் உண்டு. தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பு அரசியல் சிங்கள தேசியவாதத்தை எப்படி வளர்த்தது என்று கூறுகின்றார்களோ அதைவிட பல மடங்கு அதிகமாக தமிழ்த் தேசியவாதத்தை வலுப்படுத்த வழிவகுத்து. தமிழ்த்தேசிய உணர்வுள்ள இளையோர் படை உருவாகியது. தமிழ்த்தேசிய உணர்வுள்ள இளையோர் படை தமிழ்மக்களின் உரிமையை அரசியல் போராட்டத்தால் பெற்றுக்கொள்ள முடியாது ஆயுதப்போராட்டத்தால் மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும் என சிந்திக்கவைத்தது. அதன்பால் செயற்படவும் வைத்தது. அதற்கான பிரதான காரணம் தமிழ்த் தலைமைகளின் அரசியல் போராட்டத்தின் தொடர் தோல்வி என்றும் கூறலாம். இருப்பினும் 2009 ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் தமது உரிமைகளை அரசியல் போராட்டத்தின் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும் என்ற கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டனர்.

**வரலாற்றில் தமிழ்த்தேசியம்**

இலங்கைத் தமிழர் வரலாற்றை நாம் தெளிவாக புரிந்து கொண்டோம் என்றாலே, இலங்கைத் தமிழ்த் தேசியம் என்பது தனிநபரால் வளர்க்கப்பட்டதில்லை அதன் வளர்ச்சியின் பின்னால் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் இன உணர்வு செல்வாக்குச் செலுத்தி இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். தமிழ்த்தேசிய உணர்வு என்பது ஏனைய இன மக்களின் அடக்கு முறைகளில் இருந்து விடுபடுவதை நோக்கமாகக் கொண்டது. ஜனநாயகக் கோட்பாட்டை பிரித்தானியர் இந்தத் தீவில் அறிமுகப்படுத்தி இனவாரிப் பிரதி நிதித்துவமுறை கொண்டு சிங்கள தேசியவாத சிந்தனையை வலுப்படுத்தி தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க ஆரம்பித்த வேளையிலேயே தமிழ்மக்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வு எமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் உருவாகிவிட்டது.

அதனைப் புரிந்து கொண்ட சேர் பொன். அருணாச்சலம் தமிழ்த்தேசிய உணர்வினை அமைப்பு ரீதியாக அரசியல் கட்டமைப்புக்குள் உட்படுத்துகின்றார். அது பின்னாலில் தமிழ்மக்களின் அரசியலில் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடைய தமிழ்த்தேசியக் கட்சிகள் உருவாக வழிவகுத்தது. அதனால் தமிழ்த் தேசிய இன உணர்வுக்கு தனி ஒரு நபரோ கட்சியோ குழுவோ உரிமை கொண்டாட முடியாது. தமிழ் இனத்தின் மீதான அடக்குமுறை தீவிரம் அடையும்போது தமிழ்த்தேசிய உணர்வும் அதை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் தன்னை பரிணாம வளர்ச்சிக்குள் உட்புகுத்திக் கொள்ளும். அதன் ஒரு பகுதியாகவே இலங்கைத் தமிழ்த்தேசியஉணர்வு ஆரம்பத்தில் அரசியல் போராட்டம் உருமாறிய பின்னர் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைந்து இன்று மீண்டும் அரசியல் போராட்டமாக மாற்றமடைந்துள்ளதாக வரலாறு தெளிவாக்குகின்றது.

வேறு இன அடக்கு முறையில் இருந்து தமிழ்மக்கள் மீண்ட பின் தமிழ்த்தேசிய உணர்வு இல்லாதொழிந்து விடுமா என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். அந்தக் கேள்விக்குப் பதில், 'இல்லை' என்பதே. தமிழ் மக்கள் வேறு இன அடக்குமுறையில் இருந்து விடுபட்ட பின்னர் தமிழ்மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களை மீள்கட்டமைப்புச் செய்யும் பணியையும் அதனை எதிர்கால சந்ததியினருக்கு ஊடுகடத்துவதை நோக்கமாகக் கொண்டும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வு செயற்பாட்டுத் தன்மையிலேயே இயங்கிக் கொண்டும் இருக்கும்.

(தொடரும்)

## ஒரு பல்கலைக்கழகமும்....

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

அடங்கவில்லை. அவருடைய மனைவி ரம்பா பேசுகிறார். கூட்டம் அடங்கவில்லை. பொலிஸ் அதிகாரி பேசுகிறார் கூட்டம் அடங்கவில்லை. அப்படி ஒரு கூட்டத்தை எதிர்பார்த்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததன் விளைவு அது. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி அதிகாரத்துக்குள்ள வரையறைகளை உணர்த்திய ஒரு நிகழ்வும் அது.

ஆனால் அந்தக் குழப்பம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளுக்கு விரோதமானது அல்ல. முதலீட்டை விளம்பரப்படுத்த எடுத்துக்கொண்ட வியாபார உத்தியின் விளைவு அது.மேலும்,ஹரிஹரனின் இசையை பார்வையாளர்கள் அவமதித்ததாகவும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு தமிழ் முதலீட்டாளர் தமிழ்ப் பொதுப்புத்தியை கையாள்வதில் கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்கள் உண்டு என்பதனை உணர்த்திய ஒரு குழப்பம் அது. தாயகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் தொடர்பாக முதலீட்டாளர்களும் தாயகத்தில் உள்ள அரசியல் சமூகமும் இணைந்து ஒன்றிணைந்த ஒரு வேலைத் திட்டத்துக்குப் போகவேண்டியிருப்பதை உணர்த்திய ஒரு நிகழ்வு அது. தாயகத்துக்கு முதலீடுகள் அவசியம். தாயகத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லை; அல்லது மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை இல்லை; அல்லது முன்னேறுவது கடினம் என்று கருதும் ஒரு தொகுதி மக்கள் தாயகத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்று பாடிய ஒரு மக்கள் கூட்டம்,அந்த மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. எனவே தாயகத்தைத் தொழிற்கவர்ச்சி மிக்கதாக மாற்றவேண்டும். அதற்கு முதலீடுகள் அவசியம். ஆனால் அந்த முதலீடுகளை எந்த நோக்கு நிலையில் இருந்து முன்னெடுப்பது என்பதுதான் இங்குள்ள சவால்.

"நாங்கள் தானம் செய்கின்றோம் அல்லது தொண்டு செய்கிறோம்"என்ற நிதி அதிகார மனோநிலையில் இருந்து அல்ல.மாறாக,தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது;அதற்கு வேண்டிய துறைசார் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்ய வேண்டும். அதாவது தேச நிர்மாணத்தின் பங்காளிகள் என்ற அடிப்படையில் முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வரவேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை எப்படி தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக மாற்றுவது என்று தாயகத்தில் உள்ள அரசியல் சமூகம் சிந்திக்க வேண்டும்.

முதலாளிகள்,அவர்கள் தமிழர்களோ,சிங்களவர்களோ,வெள்ளைக்காரர்களோ யாராக இருந்தாலும்,முதலாளிகள்தான்.அவர்களிடம் லாப நோக்கம் இருக்கும்.முதலாளிகள் அப்படித்தான் சிந்திப்பார்கள்.ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளை கொழும்புமைய நோக்கு நிலையில் இருந்துதான் அணுகுவார்.அவர் அப்படித்தான் சிந்திப்பார். ஆனால்,முதலீடுகளை தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகத் திட்டமிட வேண்டியது தாயகத்தில் உள்ள அரசியல் சமூகத்தின் பொறுப்பு.கொழும்பின் நோக்கு நிலையில் இருந்தல்ல;அல்லது தனிய லாப நோக்கு நிலையில் இருந்தல்ல;தேசத்தைக் கட்டியெழுப்புவது என்ற நோக்கு நிலையிலிருந்து முதலீடு செய்யுமாறு,தமிழ் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவேண்டும்.அவர்களைத் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக்க வேண்டும். பாரதி பாடியது போல "ஆலைகள் செய்வோம்;கல்விச் சாலைகள் செய்வோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org